Registered at the G. P. O. as a Newspaper

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

National TAMIL DAILY

தேசிய தினசரி

போன் 389

தபாற் பெட்டி எண் 49

மலர் 3 | யாழ்ப்பாணம், பிலவ புரட்டாசி 30 ஆம் நாள் | ஜ. அவ்வல் 5 | (16-10 61) | திங்கட்கிழமை | இதழ் 209

★ நாவிற்கு ருசியும்
★ உடலுக்கு உறுதியும்
அளிப்பது
மொணரு அன் ரோஸ்
பப்படங்கள்
மயில், ரோஸ் மூவர்ண அடையாளங்களைக் கவனித்து வாங்குக.
கண்டிப்பகுதி விநியோகஸ்தர்கள்:
ஜெகஜோதி அன் கோ.
குருதெனியா.

# அவசரகால நீடிப்பு

## பற்றி பூரண விவாதம்

## தமிழரசுக்கட்சி எம். பி. க்கள் பார்லிமெண்டில் கோருவர்

யாழ்ப்பாணம், திங்கள்

**பல மாதங்களுக்குப்பின் மீண்டும் ஜனப்பிரதிநிதிகள் சபைக் கூட்டத்தில் வியாழக் கிழமை கலந்துகொள்ளவிருக்கும் தடைசெய்யப்பட்ட தமிழரசுக் கட்சி எம். பிக்கள், அவசரகாலச் சட்டம் நீடிக்கப்படுவது சம்பந்தமாக பூரண விசாரணை நடைபெற வேண்டுமென்று கோருவார்களெனத் தெரியவருகிறது.**

**தடுப்புக்காவலிலிருந்து சென்ற வாரம் விடுதலையடைந்த தமிழரசுக் கட்சி எம். பிக்கள் மீண்டும் இவ்வாரம் கொழும்பில் சந்திக்கவிருக்கிறார்கள். இச்சந்திப்பின் போது செனட்டர் தெரிவுக்கு தங்கள் அபேட்சகரைப் பற்றியும் இறுதி முடிவு செய்வார்களென்று தெரிகிறது.**

**முன்னாள் கூட்டுறவுக் கமிஷனரான திரு. எம். மாணிக்கத்தையே செனட்டராக்குவதென்று தமிழரசுக் கட்சி தீர்மானித்திருப்பதாகத் தெரிகிறது.**

இம்மாதம் 19-ந் திகதி வியாழக்கிழமை ஜனப்பிரதிநிதிகள் சபை மீண்டும் கூடும்பொழுது பல மாதங்களாக காலியாகக் கிடந்த எதிர்க் கட்சிப் பக்கத்தில் தமிழரசுக் கட்சி எம். பி.க்கள் மீண்டும் காட்சியளிப்பர்.

வியாழக்கிழமை பார்லிமென்டுக்கு வரமுடியாத ஒரேயொரு தமிழரசுக்கட்சி எம் பி அதன் தலைவர் திரு. எஸ். ஜே வி. செல்வநாயகம் தான். இவர் இப்பொழுது லண்டனில் இருக்கிறார்.

வெளிநாடுகளுக்குச் சென்றிருந்த மந்திரிகளும் எம். பி.க்களும் வியாழக்கிழமைக் கூட்டத்தில் கலந்துகொள்வாரென எதிர்பார்க்கப்படுகிறது.

அவசரகால நிலைமையை நீடித்து வைத்துக்கொண்டிருப்பது பற்றி பூரண விசாரணை நடத்துவதற்கு சபையின் நிரந்தர விதியை தற்காலிகமாக நிறுத்தி வைக்க வேண்டுமென்று தடை செய்யப்பட்டுள்ள தமிழரசுக்கட்சி எம். பி.க்கள் கோருவார்களென்று தெரிய வருகிறது

நிரந்தர விதியை தற்காலிகமாக நிறுத்தி வைக்க வேண்டுமென்று கோருவதற்கு 20 அங்கத்தவர்கள் தேவை. எனவே இதர எதிர்க் கட்சியைச் சேர்ந்த ஐவரின் ஆதரவை அவர்கள் கோருவார்களென்று அறியப்படுகிறது.

அவசரகாலம் மேலும் ஒரு மாத காலத்துக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

## இலங்கை வர்த்தக மந்திரி இந்தியா சேர்ந்தார்

சென்னை, அக். 15

இந்தியாவுடன் வர்த்தக உறவுகளைப் பலப்படுத்துவதற்காக இலங்கை உணவு வர்த்தக அமைச்சர் திரு. டி. பி. இலங்கத்தின தலைமையில் வர்த்தக தூது கோஷ்டியொன்று இங்கு வந்து சேர்ந்தது.

மத்திய அரசாங்கத்துடனும் ராஜ்ய அரசாங்கங்களுடனும் பேச்சுவார்த்தை நடத்தவிருக்கும் இத்தூதுகோஷ்டியில் இலங்கை உணவு அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. ஆழ்வாப்பிள்ளையும் அங்கம் வகிக்கிறார்.

இந்திய அரசாங்கத்துடன் இலங்கைத் தூது கோஷ்டி நடத்தவிருக்கும் பேச்சுவார்த்தைகளின்போது இலங்கையிடமிருந்து இந்தியா அதிக பொருள்களை இறக்குமதி செய்ய வேண்டுமென்று வற்புறுத்துமெனவும் இந்தியாவிடமிருந்து இலங்கை அதிக பொருள்களை இறக்குமதி செய்வதைச் சுட்டிக் காட்டுமென்றும் அறியப்படுகிறது.

## ஸ்ரீசுத்தானந்த பாரதியார் இம்மாதம் வரமாட்டார்

நாவலப்பிட்டி, சனி

கவியோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியாரின் இலங்கை விஜயம் தற்காலிகமாக ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருந்தபடி அவர் இம்மாதம் 18-ந் திகதி இலங்கைக்கு வரமாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மலாயாவில் மிகவும் முக்கியமான வேலைகள் பூர்த்தியாகாமல் இருப்பதாகவும் தாம் குறிப்பிட்ட திகதிக்கு வரமுடியாமைக்கு வருத்தம் தெரிவித்து கடிதம் எழுதியுள்ள ஸ்ரீ சுத்தானந்த பாரதியார் நவம்பர் மாதம் முதல் வாரத்தில் தமது இலங்கை விஜயம் பற்றி தெரிவிப்பதாக அறிவித்துள்ளார்.

## மதகுருமாருக்கு விஸாவரி கூடாது

யாழ்ப்பாணம், ஞாயிறு

இப்படியான நடவடிக்கை அந்தக் காலத்தில் இருந்திருக்குமானால் பௌத்தம் இலங்கைக்கு வந்திருக்க முடியாது. மகிந்தனும் சங்கமித்திரையும் இங்கு வந்திருக்கமாட்டார்கள்

சென்ற வெள்ளிக்கிழமை நடைபெற்ற யாழ்ப்பாணமாநகரசபை கூட்டத்தில்மதகுருமாருக்குவிசாவரியில்விதிவிலக்களிக்கப்பட வேண்டும் என்ற பிரேரணையை ஆதரித்து திரு. எஸ். இராசரத்தினம் பேசிக்கொண்டிருக்கும்போது குறுக்கிட்ட திரு. ஏ. ஜீ. இராசசூரியர் மேற்கண்டவாறு கூறினார்.

—

## சங்கிலி களவு

தெல்லிப்பழை, ஞாயிறு

. கடந்த சனிக்கிழமை காலை கீரிமலைக் கடலில் நீராடிய ஆறுவயதுடைய சிறுமியின் தங்கச் சங்கிலியொன்று காணமற்போய்விட்டது.

—

## சுழியில் சிக்கியவர் காப்பாற்றப்பட்டார்

தெல்லிப்பழை, திங்கள்

நவாலியைச் சேர்ந்த வி. சிவகுருநாதன் (21) என்னும் இளைஞர் சென்ற சனிக்கிழமை கீரிமலைக் கடலில் நீராடிக்கொண்டிருந்தபோது நீர்ச்சுழியில் அகப்பட்டு சுமார் ஒரு மைல்தூரம் இழுத்துச்செல்லப்பட்டார்.

இவர் கடலுள் அவதிப்படுவதைக்கண்ட வி. கார்த்திகேசு என்பவர் இவரை ஆபத்திலிருந்து காப்பாற்றினர். சிவகுருநாதன் உடனே காங்கேசன்துறை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

## சிமெந்துத் தொழிற்சாலை சூளையின் உலக சாதனை

மாவிட்டபுரம், ஞாயிறு

ஒருவருடம், நான்குமாதம் பத்துத்தினங்கள் தொடர்ச்சியாக வேலைசெய்த காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலையின் சூளை உலகிலேயே புதிய சாதனையை ஏற்படுத்தியுள்ளது. இதுபோன்ற நீண்டகாலமாக எந்தச் சூளையும் தொடர்ச்சியாக எங்கும் வேலை செய்யவில்லை.

1960ம் வருடம் மேமாதம் 25ந் திகதி வேலை ஆரம்பிக்கப்பட்ட இச் சூளை இவ்வருடம் அக்டோபர் மாதம் 6ந் திகதி ஓய்வு கொடுப்பதற்காக நிறுத்திவைக்கப்பட்டுள்ளது.

கைத் தொழிலில் முன்னேற்றம் அடைந்த நாடுகளில் உள்ள சூளை 333 நாட்களுக்கு மேல் இடைவிடாது பாவிக்கப்படுவதில்லை காங்கேசன் தொழிற்சாலை சூளை 498 நாட்கள் வேலை செய்திருக்கிறது.

அண்மையில் காங்கேசன் சிமெந்து தொழிற்சாலைக்கு விஜயம் செய்திருந்த பிரபல எஞ்ஜினியர்களான திரு. கேஸ்லர், திரு. கேர்மன், டாக்டர் எஞ்சல்ஸ் ஆகியோர் இத் தொழிற்சாலையின் சாதனையை பெரிதும் புகழ்ந்துள்ளார்கள்

## 'ஆசிரியர்களிடையே ஆராய்ச்சி வளரவேண்டும்'

## பாராட்டு விழாவில் உதவி வித்தியாதிபதி

யாழ்ப்பாணம், திங்கள்

"ஆசிரியர்களிடையே ஆராய்ச்சி மனப்பான்மையை வளர்த்துவந்தால் நாட்டில் அறிவு வளர்ச்சி வளம்படைத்திருக்கும். கல்வித்தரம் உயரவேண்டுமானால் பெரியார்கள் பலர் தோன்றவேண்டுமானல் ஆராய்ச்சிகளையும் ஆராய்சியாளர்களையும் போற்றவேண்டும் அந்த மனப்பான்மையை வளர்க்கவேண்டும்."

இவ்வாறு சாகித்திய மண்டலத்தின் பரிசுபெற்ற பதிற்றுப்பத்து ஆசிரியர் பண்டிதர் சு.அருளம்பலவனருக்கு நேற்றுமாலை யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தினல் வண்ணார்பண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் நடாத்தப்பட்ட பாராட்டு விழாவுக்குத் தலைமை வகித்துப்பேசிய வடபகுதி உதவி வித்தியாபதி திரு. எஸ். யூ. சோமசேகரம் குறிப்பிட்டார். அவர்மேலும் கூறியதாவது:-

தமிழ்மொழிக்கு அரியதொண்டாற்றிய ஒரு பெரியாருக்கு பாராட்டுத் தெரிவிக்கவேண்டியது அவசியமே. நானும் டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வாவும் லண்டன் சர்வகலாசாலையில் இலக்கிய ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தோமெனினும் நான் அதைத்தொடர்ந்து செய்யமுடியாதுபோய்விட்டது ஆராய்ச்சியில் எனக்கு அதிக ஈடுபாடு உண்டு.

ஆசிரியர்கள் ஆராய்ச்சி மனப்பான்மையை வளர்த்து வருவார்களேயானல் நல்ல அறிவைப்பெறலாம். ஆசிரியர்கள் தமக்குக் கைதேர்ந்த துறைகளில் ஈடுபட்டு பல துறைகளிலும் நுட்பமான ஆராய்ச்சிகளை வளர்க்கவேண்டும். பாடசாலைச் சஞ்சிகை தொடக்கம் பல்வேறு பத்திரிகைகள்மூலமும் ஆராய்ச்சி செய்தல் ஆசிரிய உலகின் கடனாக இருக்கவேண்டும். எதையும் ஆராய்ந்து உறுதிப்படுத்தும் வழக்கத்தை நாமனைவரும் கைக்கொள்ளவேண்டியது அவசியம். ஆற்றலுக்கும் துறைக்கும் ஏற்ப தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கும் உதவ ஆசிரியர்கள் உதவவேண்டும்.

நியாயதுரந்தரர் திரு. வே. நாகலிங்கம் பேசும்போது கூறியதாவது:-

தமிழ் உலகம் எங்கே செல்கிறது என்பதைப் புரிந்து கொள்ள முடியாதிருக்கிறது. நாம் உலகப் பற்றில் அழுந்தி நின்றாலும் தமிழ்ப் பற்றிலே நாம் முற்றும் துறந்த ஞானிகளாக இருப்பது வருத்தமாகவே இருக்கிறது. எங்கும் அரசியல் மயமாகவே இருக்கிறது. அரசியல் கூட்டமென்றாலோ திரைப்பட விழாவென்றாலோ முட்டி வழியும் சனக்கூட்டம் இப்படியான தமிழ்க் கூட்டங்களுக்கு வருவதில்லை. இந்நிலை மாறவேண்டும்.

ஆசிரியரை அடைந்துதான் அறிவைப் பெறலாமென்ற நிலைமை மாற்றியமைத்த உரை ஆசிரியர்களை நாம் போற்ற வேண்டும்; பாராட்டவேண்டும்.

இன்றைய சஞ்சிகைகளையும் பத்திரிகைகளையும்தான் தமிழ்க் கருவூலமெனச் சிலர் கருதுகிறார்கள். இவைகளைப் படிப்பது பிழையென்று நான் சொல்லவில்லை. ஆனல் தமிழ்க் கருவூலங்களான பண்டைய சங்க நூல்களையும் ஆராய்ச்சி நூல்களையும் நாம் நன்கு படிக்கவேண்டும்.

இலக்கியச் சுவைக்காக தமிழை அறிய, அறிவை வளர்க்க என்று எத்தனை பேர்

(5-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### உங்கள் நோய்

குணப்படுத்த உத்தரவாதம் நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 12-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப் பத்திரங்களடங்கிய கற்றலோக் (Catalogue) இனம்.

**வைத்தியர் பரிபூரணநந்தர்,** கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

உ
சிவமயம்

### திருமணம்

**சண்முகசுந்தரம்**
**இராசலட்சுமி**

போஸ்மாஸ்டர் சீ. தாமோதரம்பிள்ளை அவர்களின் மகனும் எமது பெருமகனும் கொழும்பு திறைசேரியில் இலிகிதரும் ஆகிய திருவளர் செல்வன் சண்முகசுந்தரத்திற்கும், நாயன்மார்கட்டு திரு. க. சுப்பிரமணியம் அவர்களின் புத்திரி திருவளர் செல்வி இராசலட்சுமி அம்மாளுக்கும் 20-10-61 வெள்ளிக்கிழமை மத்தியானம் 12 மணிக்கும் 1 மணிக்குமிடையில் வரும் சுபமுகூர்த்த வேளையில் நல்லூர் சிவன் கோவிலில் திருமணம் நடந்தேறும். அத்தருணம் உறவினர்களினதும் அன்பர்களதும் வருகையும் ஆசியும் அன்புடன் வேண்டப்படுகின்றன.

**சீ. விஜயசுந்தரம்**
ஸ்டோர்க் கீப்பர்,
வலி-வடக்கு ஐக்கிய பண்டகசாலைச் சமாசம்
தெல்லிப்பழை.

**சீ. ஆனந்தசுந்தரம்**
சுகாதாரப் பரிசோதகர்,
கைதடி.

மயிலிட்டி தெற்கு,
தெல்லிப்பழை.
12-10-61.

### பாதுகாவலர் பதவி

#### திறந்தவெளி அரங்கம்

யாழ்ப்பாணம் மாநகரசபை திறந்த வெளி அரங்கப் பாதுகாவலருக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கல்வித் தகைமை: குறைந்தது கனிஷ்ட பாடசாலைத் தராதரம்.

வயது: 30க்கும் 40க்கும் உட்பட்டவராயிருத்தல் வேண்டும்.

சம்பள விகிதம்: ரூபா 1080—4 × 30—ரூபா 1200 அரசாங்க வாழ்க்கைப் படியும் விசேஷ வாழ்க்கைப்படியும் உண்டு.

விண்ணப்பகாரர்: (f)பிளட் லைட்ஸ், பூட் லைட்ஸ் முதலியவை சம்பந்தமாக 10 வருடத்திற்குக் குறையாத அனுபவமுள்ளவராகவும், ஒலிபெருக்கி கருவிகளிலும், ரேடியோ தொழில்நுட்பத்திலும் தேர்ச்சி பெற்றவராக இருத்தல் வேண்டும். இவை விசேட தகைமைகளாகக் கருதப்படும்.

சமீபத்திய இரண்டு சான்றுப் பத்திரங்களின் பிரதிகள் பதவிக்குகந்தனவாக அனுப்புதல் வேண்டும். இரண்டு நற்சாட்சிப் பத்திரங்களும் இணைத்தல் வேண்டும். விண்ணப்பகாரர் அசல் பிரதிகளைக் கோரும் போது அவற்றை சமர்ப்பிக்கவேண்டும்.

பதவி, நியமன திகதியிலிருந்து ஒரு வருடத்திற்குத் தற்காலிகமானதாகக் கருதப்படும்.

விண்ணப்பங்கள்யாவும்கீழ்க் குறிப்பிட்ட விலாசத்தாருக்கு 1961-ம் ஆண்டு அக்டோபர் 23ம் திகதிக்கு முன்னதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

**ஹட்சன் செல்வராஜா**
தற்காலிக நகரசபைக் கமிஷனர்.
மாநகரசபை

மாநகரசபைக் கந்தோர்,
யாழ்ப்பாணம்.

# இறந்தவரின் வயிற்றில் மதுவாடை வீசியது

## தனியூற்று கொலை வழக்கில் டாக்டர் சாட்சியம்

யாழ்ப்பாணம், திங்கள்

வட்பகுதி அசைஸ் நீதிமன்றத்தில் நீதியரசர் டாக்டர் எச். டபிள்யூ. தம்பையா முன்னிலையில் தனியூற்று கொலை வழக்கு வெள்ளிக்கிழமை மீண்டும் விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்பட்டபோது முல்லைத்தீவு சட்ட வைத்திய அதிகாரி டாக்டர் டி. கெங்காதரம் சாட்சியமளித்தார்.

டாக்டர் கெங்காதரம் தமது சாட்சியத்தில் தெரிவித்ததாவது:

இறந்தவரான மரியாம்பிள்ளை கந்தசாமியின் பிரேதத்தை நான் பரிசோதனை செய்தேன். அவரது உடம்பில் 8 காயங்கள் காணப்பட்டன. அதில் ஒன்று கழுத்தைச் சுற்றி வரக் கிடந்தது. வயிற்றில் 5 அங்குல நீளமான காயமொன்றும் இருந்தது. நான் எதிரியான செல்லப்பா செல்லத்துரையைப் பரிசோதனை செய்தபோது அவரது வலது காலிலும் வலது கைச்சிறுவிரலிலும் இரத்தக் கறைகள் இருப்பதைக் கண்டேன். சில காயங்களும் எதிரியின் உடம்பில் இருப்பதைக் கண்டேன்.

எதிரிதரப்பு பிரதம வழக்கறிஞர் திரு. டி. கணேசலிங்கத்தினால் டாக்டர் கெங்காதரம் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார். அப்பொழுது அவர் பின்வருமாறு தெரிவித்தார்:

இறந்தவரின் வயிற்றுள் மதுவாடை வீசியது. வயிற்றுள் இருந்தவற்றை அரசாங்க பரிசோதகருக்கு அனுப்பினேன். சுப்பர் வல்லிபுரம் சாட்சியமளிக்கையில் நான் நீதிமன்றத்தில் பிரசன்னமாயிருந்தேன்.

இறந்தவருக்கு வலதுபுறத்தில் நின்று வெட்டப்பட்டிருக்க வேண்டுமேயல்லாமல் முக்கிய சாட்சியான சுப்பர் வல்லிபுரம் சொன்னதுபோல இடது பக்கத்தில் அல்ல என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

முல்லைத்தீவு பொலிசைச் சேர்ந்த சார்ஜண்ட் சரவணமுத்து, இன்ஸ்பெக்டர் எஸ். வி. மூர்த்தி ஆகியோரது சாட்சியங்களும் பதிவு செய்யப்பட்டபின் மேல் விசாரணை இன்றுவரை ஒத்திவைக்கப்பட்டது.

## குறைகளை விசாரிக்க கமிட்டி நியமனம்

கொழும்பு, ஞாயிறு

அகில இலங்கை நீர்ப்பாசனத் தொழிலாளர் சங்கத்தினரின் குறைகளை விசாரணை செய்வதற்கென ஐந்துபேர்கள் கொண்ட கமிட்டியொன்றை நீர்ப்பாசன டைரக்டர் நியமித்துள்ளார். நீர்பாசன உதவி டைரக்டர்கள் இருவரும், எஞ்ஜினியர்கள் இருவரும், எக்கவுண்டர் ஒருவரும் இக் கமிட்டியின் அங்கத்தவர்களாவர். நீர்பாசன இலாகாத் தொழிலாளர் என்றும் உரிமை தங்களுக்கு வழங்கப்படவில்லை எனத் தொழிலாளர்கள் முறையிட்டுள்ளார்கள். தொழிலாளர் பலர் வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளதாகவும் குறை கூறப்படுகிறது. வேலைநீக்கம் செய்யப்பட்ட தொழிலாளர்களுக்கு வேறு வேலை எதுவும் வழங்கப்படவில்லையாம்.

சுப்ரீம் கோர்ட்டின் இளைப்பாறிய நீதியரசர் ஒருவரின் தலைமையில் விசாரணைக் கமிஷனை நியமிக்குமாறு காணி விவசாய மந்திரியைத் தாம் கேட்டுக்கொள்ள விருப்பதாக நீர்பாசன தொழிலாளர் சங்கத்தைச் சேர்ந்த ஒருவர் தெரிவித்துள்ளார்.

# டட்லியின் உத்தேசமென்ன?

## மந்திரி இலங்கரத்ன கேள்வி?

ஹேவஹெத்தா, ஞாயிறு

"திரு. டட்லி என்ன செய்ய உத்தேசித்திருக்கிறார்? அவரைப்போன்ற பிற்போக்குவாதிகளுக்கு என்ன தேவைப்படுகின்றது? உண்மையில் வாழ்க்கைச் செலவைக் குறைப்பதற்குத் தானா அவர்கள் பாடுபடுகிறார்கள்? அல்லது தமது சொந்த நன்மைக்காக இந்த அரசாங்கத்தை நஷ்டப்படுத்த விருப்புகிறார்களா.?

ஹேவஹெத்தா வில் மரக்கறி விநியோக நிலையமொன்றைத் திறந்து வைத்துப்பேசுகையில் வர்த்தக உணவுக் கப்பல் மந்திரி திரு. டி. பி. இலங்கரத்ன மேல் கூறிய கேள்விகளைக் கேட்டார். திரு. இலங்கரத்ன மேலும் கூறியதாவது:-

வாழ்க்கைச் செலவு அதிகரித்திருப்பதாக திரு. சேனநாயக்கா குறைகூறினாலும் மரக்கறி வகையின் விலைகள் சிறிது சிறிதாகக் குறைந்துள்ளது பற்றி அவர் எதுவும் கூறவில்லை. டட்லிகூட்டங்களை ஒழுங்கு செய்து மேடைக்கு மேடை வாழ்க்கைச் செலவு அதிகமாகிறது என்று பேசி வருகிறார். ஆனால் அதை எவ்வாறு குறைத்துக்கொள்ளலாம் என்பதுபற்றி எவ்வித யோசனையையும் அவர் கூறுவதாயில்லை."

## முஸ்லிம் பெண்களுக்கு கலாசாலை

### கல்வி மந்திரிக்கு வேண்டுகோள்

பசறை, ஞாயிறு

பதுளை முஸ்லிம் மகாவித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கம் முஸ்லிம் பெண்களுக்கெனப் பிரத்தியேக பள்ளிக்கூடமொன்று அமைக்குமாறு கல்வி மந்திரி ஜனப் பதியுதீன் மாமூத்தைக் கேட்டுள்ளது.

இப்போதுள்ள முஸ்லிம் மகாவித்தியாலயத்தை இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்று பழைய மாணவர் சங்கத்தினர் விரும்புகின்றனர். இரண்டில் ஒன்று பெண்களுக்கும் மற்றையது ஆண்களுக்குமாகும். இரு பள்ளிக்கூடங்களும் வெவ்வேறு நேரங்களில் நடக்க வேண்டும் என்பதும் அவர்களது விருப்பம். ஒரு பள்ளிக்கூடம் காலையிலும் மற்றையது பின்னேரத்திலும் நடாத்தப்படவேண்டுமாம்.

முஸ்லிம் மகாவித்தியாலயத்தின் இன்றைய அதிபர் 18 வருடங்களாகக் கடமையாற்றியுள்ளார் என்றும் பள்ளிக்கூடத்தின் முன்னேற்றத்துக்கு அவர் அதிகம் பாடுபட்டிருக்கிறார் என்றும் பழைய மாணவர் சங்க மகஜரில் கூறப்பட்டுள்ளது. பள்ளிக்கூடக் கட்டடம் போதாது ஆகையால் பள்ளிக்கூடம் விஸ்தரிக்கப்படவேண்டும் எனப் பழைய மாணவர் சங்கம் கல்வி மந்திரியைக் கேட்டுள்ளது.

# "கச்சேரிகள் இருக்கும்வரை உண்மைஜனநாயகம் நிலைக்காது"

—என். எம்

அம்பலாங்கொடை, ஞாயிறு

"குடியேற்ற நாடு ஆட்சி காலத்துச் சின்னங்களான கிராம விதானைகளும், கச்சேரிகளும் இன்னமும் இந்த நாட்டில் இருந்து வருகின்றன. அவைகள் இங்கிருந்து அகற்றப்படும்வரை உண்மையான ஜனநாயகம் நிலைக்கமாட்டாது"

இவ்வாறு டாக்டர் என். எம். பெரேரா அம்பலாங்கொடை தர்ம சோக மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில் கூறினார்.

டாக்டர் என். எம். மேலும் கூறியதாவது:

"இன்றைய அரசாங்கத்தை ஆட்சி பீடத்தில் அமர்த்திய மக்களே அரசாங்கத்தில் நம்பிக்கையிழந்துவிட்டார்கள். ஏனெனில், அரசாங்கம்செய்து வரும் முன்னேற்ற அலுவல்கள் கூடப் பிழையான பாதையிலே சென்றுகொண்டிருக்கின்றன. உதாரணமாக, கருவாடு இறக்குமதி உரிமையைத்தமது கையில் வைத்திருந்து வந்த 15 தனியார்களிடமுமிருந்து இறக்குமதி உரிமையை அரசாங்கம் தனதாக்கிக் கொண்டது அரசாங்கத்தின் முன்மாதிரியான நடவடிக்கையாகும். ஆனால் கருவாடு இறக்குமதியைத் தனது உரிமையாக்கிக் கொண்டால் மட்டும்போதாது. கருவாடு விநியோகத்தை அரசாங்கம் சரிவரச்செய்துவரவில்லை. எனவே அரசாங்கத்தின் முன்மாதிரியான செய்கையால் மக்கள் நன்மையடையவில்லை"

"இந்த அரசாங்கம் பெப்ரவரி 4ந் திகதியோடு கவிழ்ந்துவிடும் என்று கூறுவதற்குநான் டட்லியைப்போல ஒரு சோதிடக்காரரல்ல. ஆனால் இன்றைய நிலைமைகளை அவதானிக்கும் பொழுது இந்த அரசாங்கமும் வீழ்ந்து விடும் என்று சொல்லலாம். ஏனென்றால் அரசாங்கத்தில் மக்கள் நம்பிக்கையிழந்துவிட்டார்கள்"

## கெடுபிடி யுத்தம்

### பிரிட்டிஷ் பிரதமர் கருத்து

லண்டன், அக். 15

"கெடுபிடி யுத்தம் அடுத்த சந்ததிவரையுமல்ல அதற்கு மேலும் நீடிக்கக்கூடும்" என்று பிரிட்டிஷ் பிரதமர் திரு. மாக்மிலன் ஆளும் கட்சியான கன்ஸர்வேட்டிவ் கட்சியின் வருடாந்த மகாநாட்டில் பேசுகையில் கூறினார்.

உலகநெருக்கடியைத் தணிப்பதற்கு சோவியத்யூனியன் இனியாவது ஒப்புக்கொள்ளுமென்று தாம் நம்புவதாக திரு. மாக்மிலன் தெரிவித்தார்.

அணு ஆயுத பரீட்சைகளை நிறுத்துவதற்கு ஜெனிவா மகாநாட்டில் பிரிட்டனும் அமெரிக்காவும் செய்த முயற்சிகள் யாவற்றையும் சோவியத் யூனியன் பயனற்றதாக்கிவிட்டதென்றும் பிரிட்டிஷ் பிரதமர் தெரிவித்தார்.

**நாவலன்** என்ற பத்திரிகைக்கு நிருபர்கள் தேவை. விண்ணப்பிக்கவும், காரியதரிசி, ஸ்ரீலங்கா சைவ ஆதீனம், 128/1/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## வடமாகாண ஆசிரியர் சகாயநிதிச்சங்கம்

(வரைவுள்ளது)

**1933ம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது.**

30 வயதுக்கு மேற்படாத சகல பாடசாலைகளிலுமுள்ள நிரந்தர ஆசிரியர் எவரும் அங்கத்தவராய்ச் சேரத் தகுதியுடையர்.
அங்கத்தவராகச் சேராதிருப்பவர்கள் சேர்ந்து தங்களுக்கும் தங்களில் தங்கியிருப்பவர்களுக்கும் சேமிப்பைத்தேடவும்.
அங்கத்தவராகச் சேர விரும்புவோர் கீழ்க்காணும் விலாசத்தில் உரிய பத்திரங்களையோ தகவல்களையோ பெற்றுக் கொள்ளலாம்.

**1-1-61ல் அங்கத்தவர்கள் தொகை - 963**
**1-1-63ல் இருப்பு ரூபா 2,90,535/67**

**1960ல் இறந்த அல்லது இளைப்பாறிய அங்கத்தவர்களுக்குச் சகாயமாக உதவிய தொகை - 23,115/50**

**1960ல் இளைப்பாறிய ஒருவர் பெற்ற தொகை:**

| பெயர். | வகுப்பு. | திருப்பிக்கொடுத்த கட்டணப் பணம். | சகாயம். | மொத்தம் |
| --- | --- | --- | --- | --- |
| | | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. |
| எஸ். ஏச். பேரின்பநாயகம் | 1 | 1092 00 | 2221 00 | 3313 00. |

**1960ல் இறந்தவர் ஒருவர் பெற்ற தொகை:**

| பெயர். | வகுப்பு. | திருப்பிக் கொடுத்த கட்டணப் பணம். | சகாயம். | மொத்தம் |
| --- | --- | --- | --- | --- |
| பி. இராமுப்பிள்ளை | 1 | 201-58 | 2592-00 | 2793-58 |

காரியதரிசி
வட மாகாண ஆசிரியர் சகாயநிதிச் சங்கம்
19, பழம் ரோட்டு, சந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

# பேர்லின்பிரச்னைபற்றி மாஸ்கோவில்மகாநாடு

## 10 தினங்களில் நடைபெறும்

லண்டன், அக். 15

பேர்லின் ஜேர்மன் பிரச்னைகள் சம்பந்தமாக இன்னும் பத்துத் தினங்களுக்குள் மேற்கு வல்லரசுகளின் பிரதிநிதிகளும் சோவியத் யூனியனின் பிரதிநிதிகளும் மாஸ்கோவில் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பார்களென்று அறிவிக்கப்படுகிறது.

பத்துத்தினங்களுக்குள் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் 22-வது மகாநாடு முடிவடைந்துவிடுவதுடன் பேர்லின், ஜேர்மனி சம்பந்தமாக மேற்கு வல்லரசு அதிகாரிகளும் மேற்கு ஜேர்மன் அதிகாரிகளும் கூடி நடத்தும் ஆலோசனையும் முடிவடைந்துவிடும்.

இதற்கிடையில் பிரிட்டனிலும் பிரான்சிலும் உள்ள மேற்கு ஜேர்மன் தூதர்களை மேற்கு ஜேர்மன் அரசாங்கம் பொன்நகருக்கு வருமாறு அழைத்துள்ளது. வாஷிங்டனிலுள்ள மேற்கு ஜேர்மன் தூதர் ஏற்கனவே பொன்நகருக்கு வந்து சேர்ந்துள்ளார். பேர்லின் ஜேர்மன் பிரச்னை பற்றி ஆலோசனை நடத்தவே இவர்கள் அழைக்கப்பட்டுள்ளனர்.

பேர்லின், ஜேர்மன் பிரச்னை பற்றி சோவியத் யூனியனுடன் மேற்கு அரசுகள் இப்பொழுது பேச்சுவார்த்தை நடத்துவதை பிரஞ்சு ஜனதிபதி ஜெனரல் டிகோல் எதிர்ப்பதாக பிரஞ்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார். பேர்லின் பற்றி மேற்கு அரசுகள் இப்பொழுது தங்களுக்குள் ஆலோசனை செய்வதையும் ஜெனரல் டிகோல் ஆதரிக்க வில்லையென்றும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

### உருண்டி பிரதமர் கொலை

லண்டன், அக். 15

மற்றொரு ஆபிரிக்க நாடான ருவண்டா உருண்டியின் பிரதமர் சென்ற வெள்ளிக்கிழமை கொலை செய்யப்பட்டது சம்பந்தமாக கொலைகாரனைக் கண்டு பிடிப்பதில் பொலிசார் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

உருண்டியின் முடிக்குரிய இளவரசரான பிரதம மந்திரி முற்போக்குக் கட்சியின் தலைவராவர். இவருடைய கட்சி சென்ற மாதம் நடைபெற்ற பொதுத் தேர்தலில் பெரும்பான்மைபலம் பெற்றது. பிரதம மந்திரி ஒரு விருந்துக்குச் சென்றிருந்த சமயம் சுடப்பட்டு மாண்டார். அவருக்கு வயது 30.

### 'பெட்டகம்' மீட்கப்பட்டது!

வாஷிங்டன், அக். 15

அமெரிக்கா, சென்ற வெள்ளிக்கிழமை வானவெளிக்கு அனுப்பிய 32-வது 'டிஸ்கவரர்' என்ற செயற்கைக்கிரகத்திலிருந்து நீக்கப்பட்ட 'பெட்டகம்' பசிபிக்கில் மீட்கப்பட்டது. பூமியை 18 தடவைகள் சுற்றி வந்தபின் இப்பெட்டகம் செயற்கைக்கிரகத்திலிருந்து நீக்கப்பட்டது.

## "கடாங்கா ஒப்பந்தம் காங்கோவை கட்டுப்படுத்தாது"

எலிஸபெத்வில்லி, அக். 15

கடாங்கா அதிபர் ஷோம்பேயும் ஐ. நா. பிரதிநிதியாரியும்சமீபத்தில் கைச்சாத்திட்ட கடாங்கா சண்டை நிறுத்த ஒப்பந்தத்தின்படி சண்டையின் போது கைது செய்யப்பட்ட இருதரப்புக் கைதிகளும் நாளை திங்கட்கிழமை பரிவர்த்தனை செய்யப்படவுள்ளனர். ஐ. நா. விடம் சுமார் கடங்கா 200 சிப்பாய்களும் கடாங்கா வசம் ஐ. நா. படையைச் சேர்ந்த 190 ஐரிஷ் துருப்பினரும் உள்ளனர்.

நேற்று ஒரு வைபவத்தில் திரு. ஷோம்பே பேசுகையில் "போராட்டம் இன்னும் முடிவடையவிலலை" என்று கூறினர்.

மத்திய காங்கோ அரசாங்க வெளிவிவகார மந்திரி திரு. ஜோசப் இலியோ நேற்று பத்திரிகை நிருபர்கள் மகாநாடொன்றில் பேசுகையில் கியாரியும் ஷோம்பேயும் செய்து கொண்ட சண்டை நிறுத்த ஒப்பந்தம் காங்கோ மத்திய அரசாங்கத்தைக் கட்டுப்படுத்த மாட்டாதென்றும் கடாங்காவை காங்கோவின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்கு காங்கோ அரசாங்கம் படை நடவடிக்கை எடுப்பதையும் அந்த ஒப்பந்தம் தடை செய்ய முடியாதென்றும் கூறினர்.

### ராதாகிருஷ்ணன் பிரயாணமானர்

பம்பாய், அக். 15

உபஜனதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் பதினொரு நாட்கள் வெளிநாடுகளில் சுற்றுப்பிரயாணம் செய்வதற்காக இன்று காலை பம்பாயிலிருந்து பிரயாணமானர். ஹங்கேரி, நெதர்லன்ட்ஸ், மேற்கு ஜெர்மனி ஆகிய இடங்களுக்கு அவர் விஜயம் செய்வார்.

### வட வியட்நாம் ஆட்சேபம்

ஹாங்காங், அக். 15

தென் வியட்நாமுக்கு தமது விசேஷ இராணுவ ஆலோசகரான ஜெனரல் மாக்ஸ்வல் டெய்லரை அனுப்புவதென்று அமெரிக்க ஜனதிபதி கென்னடி அறிவித்துள்ளது சம்பந்தமாக வடவியட்நாம் அரசாங்கம் சர்வதேசக் கட்டுப்பாட்டுக் கமிஷனுக்கு ஆட்சேபம் தெரிவித்துள்ளது.

தென்வியட்நாமுக்கு அமெரிக்கப்படைகள் வந்திறங்குவதற்கு முதல் நடவடிக்கைதான் மாக்ஸ்வல் டெய்லரின் வருகை என்றும் இது ஜெனிவா ஒப்பந்தத்துக்கு முற்றிலும் மாறான நடவடிக்கை என்றும் வடக்கு வியட்நாம் அரசாங்கம் தனது ஆட்சேபக் குறிப்பில் தெரிவித்துள்ளது.

### திரு. மேனன் வெளியேறினர்

நியுயார்க், அக். 15

மூளைக்கு வெளியே உறைந்து போயிருந்த இரத்தக் கட்டியை சத்திரசிகிச்சை மூலம் எடுத்த பின் குணமடைந்த இந்திய பாதுகாப்பு மந்திரி திரு. வி. கே. கிருஷ்ண மேனன் நேற்று சிகிச்சை நடந்த ஆஸ்பத்திரியிலிருந்து வெளியேறினர்.

## பேசும்பொழுதே ஆளையும் பார்க்கலாம்

### நவீன டெலிபோன் சேவை ஆரம்பம்

மாஸ்கோ, அக். 15

டெலிபோனில் பேசும் பொழுதே ஆளையும் பார்க்கக் கூடிய புதிய டெலிபோன் சேவை நாளை முதல் செயல்படத் தொடங்குகிறது. உலகிலேயே முதல் தடவையாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ள இந்த நவீன டெலிபோன் முறை பரிசோதனை செய்யப்பட்டு வெற்றியளித்ததாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

டெலிபோனில் பேசும் பொழுதே இரு பக்கத்திலுமுள்ளவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்ளவும் முடியும். நாளை முதல் மாஸ்கோ, லெனின்கிராட் மற்றும் ஒரு நகரம் ஆகிய மூன்று இடங்களில்தான் இந்த டெலிபோன் செயல்படும். செக்கோஸ்லவாக்கியா, போலந்து, ஹங்கேரி ஆகிய நாடுகளுடனும் இந்த டெலிபோன் சேவையை இணைத்துக் கொள்ள சோவியத் யூனியன் திட்டமிட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

### அபராதம் செலுத்த மறுத்துச் சிறைசென்றர்

#### ரூபாய். 30 க்கு பதில் ஒரு மாதச்சிறை

யாழ்ப்பாணம், திங்கள்

தொழிற் சட்டத்தை மீறிய கராஜ் சொந்தக்காரரான சாவகச்சேரியைச் சேர்ந்த என். இரத்தினம் என்பவர் மாஜிஸ்டிரேட்டினல் விதிக்கப்பட்ட அபராதத்தைச் செலுத்த மறுத்துச்சிறை சென்றர்.

கராஜ் தொழிலாளர்களது ஜாபிதாவைச் சரியாகப்பதிந்து வைத்திருக்கத் தவறிவிட்டார் என்று சாவகச்சேரியைச் சேர்ந்த கராஜ் சொந்தக்காரரான என். இரத்தினத்தின் மீது குற்றஞ்சாட்டி தொழில் இலாகாவினல் தொடரப்பட்ட வழக்கு யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் திரு அரசுவால்டன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

விசாரணையின்பின் ரூபாய். 30 அபராதம் செலுத்தவேண்டுமென மாஜிஸ்டிரேட் உத்தரவிட்டார்.

தன்னல் அபராதம் செலுத்த முடியாதென்றும் மடியில் ரூபாய். 10மட்டுமேஇருப்பதாகவும் எதிரி தெரிவித்தார். அப்பணத்தை மட்டும் செலுத்துமாறும் மீதியை மற்றொரு தவணைக்குச் செலுத்துமாறும் மாஜிஸ்டிரேட் உத்தரவிட்டார்.

கராஜ் தனக்கு மட்டும் சொந்தமல்லவென்றும் பங்காளிகளில் தானும் ஒருவனேயாகையால் அபராதம் செலுத்தமுடியாதெனவும்எதிரி மறுக்கவே அவருக்கு ஒரு மாதச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

## இந்தியாவிலேயே தயாரான முதல் மின்சார ரயில்என்ஜின்

### பிரதமர் நேரு பெருமிதம்

கல்கத்தா, அக். 15

இந்தியாவிலேயே திட்டமிட்டு தயாரிக்கப்பட்ட முதலாவது மின்சார ரயில் என்ஜின் நேற்று சித்தரஞ்சன் தொழிற்சாலையிலிருந்து வெளியே அனுப்பப்பட்டது.

இந்த என்ஜினை பிரதமர் நேரு, நேற்று நடைபெற்ற கோலாகலமான வைபவத்தின் போது வெளியே அனுப்பி வைத்தார்.

பாலகங்காதர திலகரின் நினைவாக இந்த ரயில் என்ஜினுக்கு "லோகமான்ய" என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.

"உலகின் நவீன விஞ்ஞான வளர்ச்சியின் சவாலை பாரதம் ஏற்றுக்கொண்டுள்ளதென்பதற்கு இந்த மின்சார ரயில் என்ஜின் ஒரு சாதாரணம்" என்று பிரதமர் நேரு இந்த வைபவத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

எந்த முன்னேற்றத்தையும் மின்சார அடிப்படையைக் கொண்டே கணிக்கவேண்டுமென்றும் சென்ற பத்து ஆண்டுகளில் சித்தரஞ்சன் தொழிற்சாலை இந்தியாவில் மட்டுமல்ல வெளிநாடுகளிலும் சிறந்த பெயர்பெற்றுள்ளதென்றும் ஸ்ரீ நேரு தெரிவித்தார்.

"ஐந்தாண்டுத் திட்டங்களின் மூலம் பாரதம் அபிவிருத்தி யுகம் என்னும் புதிய யுகத்தை உருவாக்கி வருகிறது. எந்தத் திட்டமும், எந்த அபிவிருத்தியும் சரியான முறையில் வளர்ச்சி பெறவேண்டுமானல் மக்கள் ஜாதிவெறி, மொழிவெறி, இனவெறி என்பவைகளை விட்டொழித்துவிட வேண்டும்" என்று ஸ்ரீ நேரு கூறினர்.

இந்த வைபவத்தில் இந்திய ரயில்வே மந்திரி திரு. ஜகஜீவன் ராமும் பேசினர்.


### மகாவலித் திட்டம் நிலம் வாங்க 15லட்சம்

கம்பளை, ஞாயிறு

மகாவலிகங்கைத் திட்டத்தின் பிரதான ஏரி நிறுவுவதற்கான நிலப்பகுதியில் வாழும் சுமார் 700 குடும்பங்களை திட்ட வேலைகள் ஆரம்பமாகும்போது, அப்பகுதியிலிருந்து குடி எழுப்ப வேண்டி நேரிடும் எனக் காணிவிவசாய மந்திரி திரு. சி. பி. டி' சில்வா கம்பளையில் நடைபெற்ற கூட்டமொன்றில் கூறினர். அக்குடும்பங்கள் அனைத்துக்கும் நியாயமான நஷ்டஈடு வழங்கப்படும் எனவும், தேவைப்பட்டால் செழிப்பான நிலப்பகுதிகளில் அவர்கள் அமர்த்தப்படுவர் எனவும் காணி விவசாய மந்திரி கூறியுள்ளார்.

மகாவலிகங்கைத் திட்ட வேலைகள் அடுத்த வருடம் ஆரம்பமாகவிருக்கின்றன. இத்திட்ட வேலைக்குத் தேவையான நிலப்பகுதியை மக்களிடமிருந்து வாங்குவதற்கென 15 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

குறிக்கப்பட்ட நிலப்பகுதிகளில் வாழும் மக்கள் சிலர் அவற்றை வழங்குவதற்கு ஏற்கெனவே சம்மதம் தெரிவித்துள்ளார்கள். காணிவிவசாய மந்திரி அவர்களுக்கு நன்றி தெரிவித்தார்.



சமீபத்தில் லண்டனில் நடபெற்ற காமன்வெல்த் பாதுகாப்பு மகாநாட்டில் காமன்வெல்த் நாடுகளின் பிரதம பாதுகாப்பு அதிகாரிகள் கலந்துகொண்டனர். வலது புறத்திலிருந்து இரண்டாவதாக பாக்கிஸ்தான் விமானப்படைத் தளபதி எயர் மார்ஷல் அஸ்கர்கானும், நான்காவதாக இந்திய இராணுவ அதிகாரி ஜெனரல் பி. என். தாப்பரும் நிற்கின்றனர்.

## மணி வாக்கு

மௌனம் என்னும் கோயிலினுள் உனது தூய எண்ணங்களைப் பிரதிஷ்டை செய்து வை.

ஈழநாடு
EELA NADU

யாழ்ப்பாணம் பிலவ ஆண்டு புரட்டாதி மீ 30 உ (16-10-61)

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone: 389.

## காங்கேசன்துறை துறைமுகம்

இரண்டு வருடங்களுக்குப் பின் அரிசிக் கப்பலொன்று காங்கேசன் துறை துறைமுகத்துக்கு வந்து அரிசி மூடைகள் இறக்கப்படுவது இப்பகுதிக்கு ஒரு மகிழ்ச்சியான செய்தியாகும். 71ஆயிரம் மூடை அரிசி இக்கப்பலில் வந்திருக்கிறதாம். சுமார் 600 பேர் அரிசி மூடைகளைக் கரை சேர்ப்பதில் ஈடுபட்டுள்ளதாகவும் ஒரு நாளைக்கு ஏழாயிரம் மூடை இறக்கப்பெற்று வருவதாயும் தெரிகிறது.

ஐந்து நாட்களில் 35 ஆயிரம் மூடை இறக்கப்பட்டுள்ளனவாம். இக்கணக்கின்படி பார்த்தால் 600 பேருக்கு இந்த ஒரு கப்பல் இங்கு வந்ததன் மூலம் பத்து நாட்களுக்கு வேலை கிடைத்துள்ளது. வேலைக்காக பெயர்ப்பதிவு செய்துகொண்ட எஸ். எஸ். ஸி.தேறிய மாணவர்களில் சிலருக்கும் இங்கு இக்கப்பல் வந்த காரணமாக தற்காலிகமாக வேலை கிடைத்துள்ளதாயும் தெரிகிறது. இக்கப்பல் வேலைமுடிந்ததும், மீண்டும் அம்மக்களெல்லாரும் வேலையில்லாமல் கஷ்டப்படவேண்டியிருக்கும்.

கொழும்புத்துறைமுகத்திலே மழை, தொழிற் சங்க தகராறு முதலிய காரணங்களால்,வேலைகள் சரிவர நடைபெற முடியாமல் பல கப்பல்கள் துறைமுகத்துக்கு உள்ளேயும் வெளியேயும் தவம் கிடப்பதாயும், சில கப்பல்கள் இலங்கையில் இறக்கவேண்டிய சரக்குகளுடன் வேறு நாட்டுக்குச் சென்றுவிடுவதாயும், இதனல் பெரிய நஷ்டம்ஏற்படுவதாகவும் கூறப்படுகின்றது. கொழும்பு விட்டால்காலித்துறைமுகத்துக்குத்தான் சாதாரணமாகக் கப்பல்களை அனுப்புகின்றனர்கள். அப்படிச்செய்தும் சமாளிக்க முடியவில்லை. இம்முறை ஒரு கப்பலை இப்பகுதிக்கு அனுப்பி வைத்தது ஆச்சரியமே! இதற்காக சம்பந்தப்பட்ட அதிகாரியைப் பாராட்ட வேண்டும்.

காங்கேசன் துறைமுகத்துக்கு, அரிசிக் கப்பலை அனுப்பியது காரணமாக வேலைகள் துரிதமாக முடிந்துள்ளதுடன், கொழும்புத துறைமுகத்தின் சங்கடம் குறைய ஓரளவு உதவுள்ளதும்அடிக்கடி கப்பல்களை வட பகுதித்துறைமுகங்களுக்கு அனுப்பி சாமான்களை இறக்குவதன் மூலம், பலவிதங்களிலும் இலங்கைக்கு நன்மையாகும். இதை அதிகாரிகள் உணர்ந்து தொடர்ந்து கப்பல்களை இப்பகுதிக்கு இனியாவது அனுப்பிவர வேண்டும். அப்படிச் செய்வது வடபகுதி மக்களின் இழந்த நம்பிக்கையை ஓரளவாவது அரசங்கம்பெறுவதற்கு உதவியாக இருக்கும்.

நடப்பு வருடத்தில் காங்கேசன் துறை துறைமுகத்தை அபிவிருத்தி செய்ய வரவு செலவுத் திட்டத்தில் மான்யம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனல் இன்னும் எவ்வித வேலையும் ஆரம்பமாகவில்லை. கரைக்கு ஒரு மைல் தூரத்தில் கப்பல் நிற்க வேண்டியுள்ளது. கப்பலிலிருந்து படகுகளில் சாமான் மூடைகளை இறக்கி, அப்படகுகளை கரையை நோக்கிச் செலுத்தி வந்து கழுத்தளவு தண்ணீரிலே ஆட்கள் தலையில் மூடையைச் சுமந்து, கரை சேர்க்கின்றனர். பல வருடங்களுக்கு முன் கரையிலிருந்து சுமார் அரைமைல் தூரத்துக்கு மரப்பாலம் இருந்துள்ளதாயும் சமான்களை இறக்குவது அதிக சுலபமாக அக்காலத்தில் இருந்ததாயும் சொல்லப்படுகின்றது. இத் துறைமுகப் பாலத்தை இனியும் சுணங்காமல் கட்டி, காங்கேசன் துறைத் துறைமுகத்தை அதிகமாகப் பயன்படுத்துவது, வடபகுதி மக்களுக்கு மட்டுமின்றி இலங்கைக்கே பலவிதங்களிலும் நன்மையாகும். எக்காரணம் பற்றியும் இவ்விஷயத்தில் இனியும் பாராமுகமாக அரசாங்கம் இருப்பின், இப்பகுதி மக்களின் அபிமானத்தைப் பெற முடியாது போவதுடன் இலங்கைக்கே அதிக தீங்கு செய்து கொண்டதாகும்.

# காந்திஜி பயின்ற இயற்கை வைத்தியம்

## மேனடுகளில் பரவிவருகின்றது

**இயற்கை வைத்திய முறைகள் இன்று மேனடுகளில் விரிவாகப் பரவிவருகின்றது. அங்குள்ள வைத்திய நிபுணர்களும் இதில் மிகுந்த ஆர்வம் காட்டி வருகின்றனர். ஆமதாபாத் வசந்த இயற்கை வைத்திய ஆஸ்பத்திரியைச் சேர்ந்த டாக்டர் கே. எச். காட்மான் இக்கட்டுரையில் இயற்கைச் சிகிச்சை முறைகளை ஆராய்ந்துள்ளார்.**

இயற்கை வழிகளில் நோய்களைச் சிகிச்சை செய்யும் முறை இப்போது மேற்கு நாடுகளில் நாளுக்கு நாள் பரவி வருகிறது. இயற்கை சிகிச்சை முறைகளில் மேலும் மேலும் அதிக டாக்டர்கள் நிபுணர்களாகி வருகிறார்கள். ஆஸ்பத்திரிகள் கூட இயற்கை வைத்தியத்தில் தீவிர அக்கறை காட்டி வருகின்றன. ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் உள்ள இயற்கை நீரூற்றுப் பட்டணங்களிலும், ஆரோக்கிய வாசஸ்தலங்களிலும் சிகிச்சை நிலையங்களிலும், புது வாழ்வு நிலையங்களும் தோன்றி வருகின்றன. ஆனல், இந்த இயற்கை வைத்தியம் ஜெர்மனியில் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கும் அளவுக்கு, வேறெதிலும் ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்று சொல்லவேண்டும். வைத்திய அதிகாரிகள் கூட இதன் சிறப்பை ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

### புதியது அல்ல

உண்மையில், நீரையும் காற்றையும், மண்ணையும், சூரியனையும், மூலிகைகளையும், சரியான உடல் அசைவுகளையும், சீரான உணவுப் பழங்களையும், கனிஜ சத்துள்ள ஊற்றுக்களையும் உபயோகித்து இயற்கை முறையிலேயே குணம் காண்பதென்பது புதிய விஷயமல்ல. ரசாயனப் பொருள்களை வைத்தியத் துறையில் ஈடுபடுத்தும் ஆர்வம் பெருகப் பெருக, இந்த இயற்கை வைத்திய முறையை மக்கள் அநேகமாக மறந்துவிட்டிருந்தார்கள்; அவ்வளவுதான். ஆனல் ஜெர்மனியில் மட்டும் இந்த இயற்கை வைத்திய மரபு முறியாமல் இருந்து வந்திருக்கிறது. இதற்கு முக்கிய காரணமாக ஜெர்மனி நாட்டின் ஔஷத நீரூற்றுஸ்தலங்களைச் சொல்ல வேண்டும். ஆதி நாளில் ரோமானிய மக்களே வியந்து பாராட்டிய இந்த ஔஷத நீரூற்றுகள் காரணமாக ஜெர்மனியில் மிக உயர்த்தியான இயற்கை வைத்தியப் பண்பாடு ஒன்று வளர்ச்சியடைந்து வந்திருக்கிறது சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன்னுல் ரோமானியர் ஜெர்மனிக்கு வந்தபோது, அவர்கள் இந்த நீரூற்றுகளைப் பார்த்துவிட்டு இளமையும் ஆரோக்கியமும் தரும் அற்புதக் கிணற்றுள்" என்று அவற்றைப் புகழ்ந்தார்கள். ரசாயனப் பொருள்கள் மூலம் வைத்திய சிகிச்சை என்பது ஆரம்பமான நாட்களில் பலர், இந்தப் புதிய முறையில் திருப்தியடையாமல் உலகில் பல பாகங்களிலிருந்தும் இந்த ஜெர்மன் ஔஷத நீரூற்றுக்களுக்குத்தான் குணம் தேடி வந்தார்கள். அவ்வளவு தூரத்துக்கு இவற்றின் புகழ் வலுவாகப் பரவியிருந்தது.

### மேதைமிக்க விவசாயி

சென்ற நூற்ருண்டின் துவக்கத்தில் டாக்டர்களெல்லாம் வெறுமே யந்திரம்போல் தொழில் நடத்தி, பணம் தேடுவதையே லட்சியமாகக் கொண்டிருந்த ஒரு சமயத்தில், வின்ஸென்ஸ் ப்ரீஸ் நிட்ஸ்' (1799—1851) என்னும் மேதை ஒருவர் வெளிப்பட்டார். அவர் ஒரு விவசாயிதான். ஆனல் அவர்தான் இக்காலத்து இயற்கை வைத்திய முறையின் தந்தை. அவர் எதையும் நுணுக்கமாய் கவனித்து அறிந்து கொள்ளும் ஆற்றல் படைத்தவர்; எல்லையற்ற அனுபவம் உள்ளவர்; இது மட்டுமின்றி, 2300 ஆண்டுகளுக்குமுன்பப் போக்கிரேஹிடீஸ் என்னும் புகழ் மிக்க கிரேக்க வைத்தியரால் கண்டுபிடிக்கப்பட்ட நீர் வைத்திய முறை என்னும் பழம் பெரும் சிகிச்சை மரபையும் நன்கு ஆராய்ந்து அறிந்தவர். இவ்வளவு தகுதிகளுடன் ப்ரீஸ் நிட்ஸ் மக்களின் நோய்களைக் குணப்படுத்த ஆரம்பித்தார். தண்ணீர், காற்று, அசைவு, சுத்தக் காற்று, உணவுக் கட்டுப்பாடு இந்த அம்சங்களை மட்டும் வைத்துக்கொண்டு அவர் வைத்தியம் நடத்தினர். ஸைலீஷியாவில் அவர் வசித்து வந்தார். நாளடைவில் அந்த ஊர் ஒரு புதிய யாத்திரை ஸ்தலமாகிவிட்டது. ப்ரீஸ் நிட்ஸின் சிகிச்சை முறைகள் தந்த வெற்றிப் பலன்களை பார்த்து விட்டு, ஐரோப்பாவின் எல்லாப் பகுதிகளிலும் மாணவர்களும்இளவரசர்களும் கூட அவரிடம் வர ஆரம்பித்தார்கள். அவர் 1851ம் ஆண்டு இறந்து போனர். அதற்குள் அவர் 30,000 நோயாளரை தமது இயற்கை வத்திய முறையால் குணப்படுத்தியிருந்தார். அதற்குள், அவரது இயற்கை வைத்திய உத்திளை 300 டாக்டர்களுக்கு மேல் அவருடைய இல்லத்தில் கற்றுத் தேர்ந்துவிட்டார்கள். பிற்பாடு அவர்கள் மேற்கு நாடுகளனைத்திலும் இயற்கை வைத்தியத்தைப் பரம்ப ஆரம்பித்தார்கள். இவ்வாறு, ஒரு பக்கம் நவீன வைத்திய முறை விடாமல் மேலும் மேலும் முன்னேறிக் கொண்டிருக்கும்போது மறு பக்கம் இயற்கை வைத்தியம் வேரூன்றிவிட்டது.

### இயற்கை வைத்திய சங்கங்கள்

இயற்கை வாழ்க்கை முறை, இயற்கை வைத்திய முறை ஆகியவற்றுக்கான முதலாவது சங்கம் ஜெர்மனியில் 1822-ம் ஆண்டு ஸ்தாபிதமாயிற்று. ஜெர்மனி முழுவதிலும் அதற்குப் பல கிளைகள் தோன்றின. ஜெர்மனி நாடு ஆலைத்தொழில் வளர்ச்சிப் பாதையில் முன்னேற ஆரம்பித்த ஒரு சமயத்தில் இந்த இயக்கம் துவங்கியது ஏதோ தற்செயலாக நிகழ்ந்த காரியமல்ல. 1913-ம் ஆண்டுக்குள் இந்தச் சங்கங்களில் ஆண்களும் பெண்களுமாக 1,50,000 பேருக்கு மேல் சேர்ந்துவிட்டார்கள். ஆலைத்தொழில்வளர்ச்சியின் விளைவாக செயற்கை வாழ்க்கையில் புதிது புதிதாக எத்தனையோ வியாதிகள் தோன்ற ஆரம்பித்ததுதான் இதற்குக் காரணம். "நாகரிக வியாதிகள்" எனச்சொல்லப்படும் இந்த நோய்களை நவீன வைத்திய முறைகளால் சமாளிக்கமுடியாமல் போய்விட்டது.

இந்த நிலைமை காரணமாக வைத்தியத்துறையின் வளர்ச்சியில் உண்மையான ஆர்வம் கொண்ட டாக்டர்கள் பலர், பழைய சிகிச்சை முறைகளில் அக்கறை காட்ட ஆரம்பித்தார்கள். நீப் (1821-1897)போன்ற "பாமர மேதை" களுக்கெல்லாம் வாரிசுகளாக இந்த டாக்டர்கள் விளங்கினர்கள். இந்த நீப் என்பவர்தான் ப்ரீஸ நிட்சைக்குப் பிறகு விஞ்ஞானரீதியான இன்றைய இயற்கை வைத்திய முறைகளை உருவாக்கி வளர்த்தவர். பாரதநாட்டில் இயற்கை வைத்தியத் துறைகளில் தீவிர அக்கறை காட்டி அவற்றை வாழ்க்கையில் உறுதியுடன் பயின்ற மகாத்மா காந்திகூட இந்தப் புகழ்மிக்க பெரியார்களின் சீடராகவே தம்மைக் கருதிவந்தார்.

இயற்கை வைத்திய முறைகளைப் பின்பற்றும் டாக்டர்களின் முதல்சங்கம் உருவான 50 ஆண்டுகளுக்கப்புறம் அதாவது 1890-ம் ஆண்டுக்கப்புறம் இயற்கை வைத்தியத் துறையை தகுதிமிக்க வைத்தியர்கள் முன்னின்று நடத்தி அதற்கு மேலும் மேலும் ஆக்கமளித்தார்கள்.

இப்போதெல்லாம்,இயற்கை வைத்தியம் என்பது ஜெர்மன் பல்கலைக்கழகங்களில் வைத்தியப்பயிற்சியில் ஓர் அம்சமாகிவிட்டது. இந்தப்பயிற்சி முடிந்தபின் அதில்விசேஷ ஆராய்ச்சி நடத்தித் தேர்ச்சி பெறுவதும் சாத்தியமே. இயற்கை வைத்தியததின் விஞ்ஞான அடிப்படைகளை ஆராய்வதற்கென பெரிய ஆராய்ச்சி நிலையங்களும் ஏற்பட்டிருக்கின்றன.

இயற்கை வைத்தியம் என்பது முன் நாளில்போலவே இன்றும் வைத்தியசாஸ்திரத்தின் ஓர் இன்றியமையாத உறுப்பாகிவிட்டது.

## பகலில் ஆரம்பித்து இரவில் கைவிட்டனர்

மாவிட்டபுரம், ஞாயிறு

காங்கேசன்துறை அரசினர் ஆஸ்பத்திரியைச் சேர்ந்த 200க்கு மேற்பட்ட காசநோயாளர் சென்ற வெள்ளிக்கிழமை காலை ஆரம்பித்த தமது உண்ணுவிரதத்தை அன்று இரவு 8 மணிக்கு கைவிட்டனர். இவர்களுடைய குறைகளை யாழ்ப்பாணம் சுகாதார அதிகாரிக்கு எடுத்துக் கூறி நடவடிக்கை எடுப்பதாக ஆஸ்பத்திரி மேல் அதிகாரிகள் தெரிவித்ததன் பேரிலேயே அவர்கள் உண்ணுவிரதத்தைக் கைவிட்டனர்.

கடந்த புதன் வியாழன் ஆகிய தினங்களில் சுகாதார அமைச்சின் உத்தரவுப்படி அவர்களுக்கு முன்பு கொடுக்கப்பட்ட உணவில் அரைவாசியாகக் குறைத்துக் கொடுத்ததே இதற்குக் காரணமெனத் தெரிகிறது.

## ஐயாறன் எழுதுவது

புரட்டாசி கடைசி சனிக்கிழமையை முன்னிட்டு இங்கு வண்ணை சிவன் கோவிலிலும், பெருமாள் கோவிலிலும் நல்ல கூட்டம். மாலை 3 மணிக்கு மேல் கூட்டம் தாங்கவில்லை. ஐயாயிரம் பேர்களுக்குமேல் வந்து விளக்கேற்றினர்களாம்!

கோவிலுக்கு முன்னே பலர் அகல் விளக்குக் கடைகள் முதல்நாள் மாலையிலேயே ஏற்பட்டன. எண்ணெயும் விளக்குமாக 60 சதமாம். ஒவ்வொருவரும் காக்கும் கடவுளாகிய பெருமானுக்கு, ஒரு விளக்கும், சனி பகவானுக்கு மற்றொரு விளக்கும் வாங்கி ஏற்றினர். கோவிலெல்லாம் ஒரே விளக்கு மயம்தான்.

பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் இவ்விதம் வந்து வழிபட்டதால், அகல் விளக்குக் காரர்களுக்கு வியாபாரம் கோவில் குருமார்களுக்கு வரும்படி பக்தர்களுக்கும் தங்கள் இன்னல்களைத் தீர்த்து கடவுள் காப்பாரென்ற நம்பிக்கையும் ஆறுதலும் மனித மனம் வேண்டுவது நம்பிக்கையும் ஆறுதலும் தானே!

* * *

ஒரு பிச்சைக்காரி காலையிலே 60 சதம் கொடுத்து ஒரு விளக்கைவாங்கி, கோவிலுக்குள் சென்றவரிடம் அதைக் கொடுத்து ஏற்றிவைக்கச் சொன்னர். சாதி காரணத்தால், தானே உள்ளே வரவில்லை என்று தெரிந்தது. அந்த இரு கோவில்களிலும் சாதி வேற்றுமையின்றி, யாரும் உள்ளே சென்று தரிசிக்க, சிவபெருமானும், வரதராஜரும் கதவைப் பல்லாண்டுகளுக்கு முன் திறந்துவிட்டுவிட்டனர். என்றலும் பழைய வழக்கம் காரணமாக சிலர் வெளியிலேயே இருந்து கும்பிடுகிறார்கள்.

அந்தப் பிச்சைக்காரி, கையிலிருந்த காசுக்கு ஒருவிளக்கை விலைக்குவாங்கி சுவாமிக்கு காணிக்கை செலுத்தியபின், மீண்டும் பிச்சைவாங்க ஆரம்பித்துவிட்டதைக் கண்டேன்! பிச்சை எடுத்தாகிலும், சுவாமிக்கு விளக்கேற்றிவிட வேண்டுமென்று அவ்வளவு நம்பிக்கை! இதனல் எவ்வளவு ஏழைகளுக்குப் பிழைப்பு! அன்று அந்தப் பிச்சைக்காரிக்கும் நல்ல வருமானம்! மூடநம்பிக்கை என்று சிலர் கூறலாம்.ஆனல் தெய்வத்தின் பெயரால் பரஸ்பர உதவியுடனே சமூகம் எப்படி வாழ்கிறதென்பதை அன்று அங்கு காணமுடிந்தது.

பகலிலே ஏற்றிய அந்த விளக்குகள்எல்லாம் மறுநாள் உடைந்து, கீழே எல்லாம் எண்ணெய். எதுவும் வீணகாமலும், கோவிலை அழகுசெய்யும் முறையிலும், மக்களின் இந்த பக்தியை சமூகத்துக்குப் பயன் படுத்த முடியுமாயின், கோவிலை வைத்து சமூக சேவைகள் எவ்வளவோ செய்ய முடியுமல்லவா?

* * *

அடுத்த பிப்ரவரியிலே எட்டு கிரகங்கள் ஒன்று சேருவதால், உலகமே நாசமடைந்துவிடுமென்று சில சோதிடர்கள் கூறுகின்றனர். பிப்ரவரியுடன் உலகம் முடிந்துவிடாதென்றும், ஆனல் பூகம்பம், சூறாவளி, யுத்தம் போன்ற பல உற்பாதங்கள் ஏற்படுமென்றும் மற்றும் சிலர் கூறுகின்றனர்.

பெங்களூரைச் சேர்ந்த புரபஸர் பி. வி. ராமன், அடுத்த வருடம் யுத்தம் வருமென்றும் அது மூன்றுவருடகாலம் நீடித்திருக்குமென்றும் எழுதுகின்றார். சாதாரண ஆயுதங்களுடனேயே அந்த யுத்தம் நடககுமாம். அணுகுண்டு இல்லாதவரை க்ஷேமம். ஆனல் அணுகுண்டர்கள், மலைமலையாக அக்

(5ம் பக்கம் பார்க்க)

# சிறுவர்க்குரியநூல்கள் கவர்ச்சியாக அமையவேண்டும்

## கலைவிழாவில் திரு. சோமசேகரம் உரை

மாவிட்டபுரம், ஞாயிறு

"சிறுவர்களுக்கான பாட நூல்களை அழகான முறையில் அச்சிட்டு வெளியிட வேண்டும். பாட நூல்கள் கண்ணைக் கவரக்கூடியதாக இருந்தாற்றான் சிறுவர்களின் புலன் அதிலே செல்லும். தமிழில் சிறுவர்க்குரிய நூல்கள் இப்பொழுதுதான் வெளிவரத் தொடங்குகின்றன. இதுமகிழ்ச்சிக்குரிய காரியம்" இவ்வாறு வடபகுதி வித்தியாபதி திரு. எஸ். யூ. சோமசேகரம் இலங்கைக் கலைக்கழகத்தின் நாடகக்குழுவின் ஆதரவில் குரும்பசிட்டி சன்மார்க்க நாடக மன்றத்தினர் அளித்த நவராத்திரி காலக் கலைவிழாவில் தமது தலைமைப் பேருரையில் குறிப்பிட்டார்.

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி ஆசிரியர் திரு. த. சண்முகசுந்தரம் "நாடக உலகில் நாம்" என்னும் பொருள் பற்றிப் பேசிய பொழுது வட இலங்கையில் பழைய தமிழ் நாட்டுக் கூத்து வளர்ச்சி பற்றிக் கூறினர். தமிழ் நாடக மறுமலர்ச்சி பழமைக்கும் புதுமைக்கும் பாலமாகத் தமிழ் மரபு குன்றாமல் அமைய வேண்டுமெனவும் அவர் சுட்டிக்காட்டினர். பழைய கூத்து முறைகளுக்குத் தமிழ்ப் பெருமக்கள் தமிழின் தொன்மை பற்றி ஆதரவு காட்டி போற்றி வளர்க்க வேண்டும் என்பதை எடுத்துரைத்தார்.

திரு. கனக. செந்திநாதன் தமது வரவேற்புரையிலே சங்க வளர்ச்சியைப்பற்றிக் கூறிய பின்னர், தமிழை வளர்த்த பெரியார் ஈழகேசரிப் பொன்னையா சங்கத்திற்கு உறுதுணையாக இருந்து தொண்டாற்றிய விபரங்களை எடுத்துரைத்தார்.

சன்மார்க்கநாடகமன்றமளிக்கும் கலைவிழா திரு. பொன்னையாவுக்கு மிகவும் பிரீதியான ஒரு துறையெனவும் அவர் கூறினர்.

சங்கச் செயலாளர் திரு. த. இராசரத்தினத்தின் நன்றியுரையைத் தொடர்ந்து பரத நாட்டிய நிகழ்ச்சியும், கும்மியும், 'நிறைகுடம்' என்ற வரலாற்று நாடகமும், கொட்டகைக் கூத்து முறையில் அமைந்த 'பக்த நந்தனர்' என்ற நாடகமும், 'இரணியன்' என்ற புராண நாடகமும் நடைபெற்றன.

# மயிலிட்டிக் கரையில் 12 பேர் கைது

## சட்ட விரோதமாகக் குடியேறினராம்

மாவிட்டபுரம், ஞாயிறு

பருத்தித்துறைப் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த சார்ஜண்ட் ஜோர்ஜ் எக்கநாயக்காவுக்குத் தகவல் கிடைத்ததைத் தொடர்ந்து அவரது தலைமையில் சென்ற பொலிஸ் கோஷ்டி ஒன்று சனிக்கிழமை காலை மயிலிட்டிக் கரையோரத்தில் சட்டவிரோதமாகக் குடியேறியவர்களெனச் சந்தேகிக்கப்பட்ட ஏழு பேர்களைக் கைது செய்தது.

வெள்ளிக்கிழமை நள்ளிரவு சுமார் 38 சட்டவிரோதக் குடியேற்றக்காரர்கள் வந்திறங்கியதாகக் கிடைத்த தகவலின் மீது வளாயில் என்ற இடத்தில் மேலும் ஐவரைப் பொலிசார் கைது செய்தனர். மற்றவர்களையும் தேடி வருகின்றனர். இவர்களைப்பற்றிய தகவல்கள் சகல பொலிஸ் நிலையங்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை, காங்கேசன்துறை ஆகிய இடங்களில் முகாமிட்டிருக்கும் இராணுவ சிப்பாய்களின் உதவியுடனேயே 12 பேர்களும் கைது செய்யப்பட்டனர்.

## நீதிமன்றத்தில் குமாஸ்தா மோசடி!

இரத்தினபுரி, ஞாயிறு

இரத்தினபுரி மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் பிரதான குமாஸ்தாவாக சிலகாலம் தற்காலிகமாகக் கடமையாற்றிய திரு. பீட்டர் குணரத்ன என்பவர் 505 ரூபாயை அங்கிருந்து மோசடி செய்ததாக இன்ஸ்பெக்டர் பி. பி. ஹேரத்தினல் இரத்தினபுரி மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இதில் 52 சாட்சிகள் அழைக்கப்பட்டுள்ளனர். இரத்தினபுரி மாஜிஸ்டிரேட் திரு.கே. ஏ. பி. ரணசிங்கா முதலாவது சாட்சியாவார்.

# ஐ. நா. விலிருந்து தென் ஆபிரிக்கா விலகாது

பிரிட்டோரியா, அக். 15

ஐ. நா. ஸ்தாபனத்திலிருந்து தென்னாபிரிக்கா விலகமாட்டாதென்றும் ஐ. நா. வில் அங்கத்துவ நாடுகளின் பேச்சுச் சுதந்திரத்தை தென்னாபிரிக்கா வலியுறுத்தி வருமென்றும் தென்னாபிரிக்க பிரதமர் டாக்டர் வெர்வூட் தெரிவித்தார்.

தென்னாபிரிக்க வெளி விவகார மந்திரி திரு. எரிக்லோ ஐ. நா. மகா சபையில் நிகழ்த்திய உரைக்கு ஐ. நா. சபை கண்டனத் தீர்மானம் நிறைவேற்றியதைக் குறிப்பிடுகையிலேயே டாக்டர் வெர்வூட் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கண்டனத் தீர்மானத்தை ஆதரித்து ஒரேயொரு மேற்கு நாடான நெதர்லண்ட்ஸ் வாக்களித்ததுதான் தமக்கு ஆச்சரியமாக இருப்பதாக டாக்டர் வெர்வூட் கூறினர்.

## ஒட்டிப் பிறந்த இரட்டை குழந்தைகள்

டேர்பி, அக். 14

தலைகள் ஒட்டிக் கொண்ட இரட்டைக் குழந்தைகள் கடந்த வியாழன்று டேர்பி தொழிலாளி ஜான் ஸாண்டர்ஸின், மனைவி திருமதி பெரிக்குப் பிறந்தது. இந்தச் சயாமிய இரட்டை ஆண்குழந்தைகள் ஜனனச் செய்தி இன்றுவரை இரகசியமாக வைக்கப்பட்டிருப்பதாக ஸாண்டர்ஸ் கூறினர்.

மார்க், அட்ரியன் என்ற இரு குழந்தைகளும் சுகமாக இருப்பதாக ஆஸ்பத்திரி அதிகாரி ஒருவர் சொன்னர். குழந்தைகளை ரண சிகிச்சை மூலம் பிரிப்பதைக் குறித்து டாக்டர்கள் இன்னும் முடிவு செய்யவில்லை. குழந்தைகள் பிழைக்குமா என்று டாக்டர்கள் சந்தேகிக்கிறர்கள்.

ஐ. நா. காரியதரிசி

## ரஷ்யாவின் யோசனை அமெரிக்கா நிராகரித்தது

நியுயோர்க், அக். 15

ஐ. நா. தலைமைக் காரியதரிசி பதவி சம்பந்தமாக ஒரு இடைக்கால ஏற்பாட்டுக்கு சோவியத் ரஷ்யா தெரிவித்தயோசனையை அமெரிக்கா இன்றுநிராகரித்து விட்டது. இடைக் கால ஏற்பாடாக தலைமைக் காரியதரிசி ஒருவரை நியமிக்கலாமென்றும் தலைமைக் காரியதரிசி மூன்று துணைக் காரியதரிசிகளை அரசியல் அடிப்படையில் தெரிவு செய்யலாமென்பதும்தான் ரஷ்யா தெரிவித்த யோசனையாகும்.

இந்த யோசனை ஐ. நா. ஸ்தாபனத்தை அரசியல் முகாம்களாகப் பிரித்து அந்த ஸ்தாபனத்தின் நோக்கத்தையே குலைத்து விடுமென்றும் அமெரிக்கப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

## ஐயாறன்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

குண்டுகளை அடுக்கி வைத்துக் கொண்டு, சும்மா இருப்பரா? ஒன்றை நினையாத முன் வந்து நிற்பினும் நிற்கும் எல்லாம் எனையாளும் ஈசன் செயல்!

* * *

ககாரின் இங்கு காரில் சுற்றுவதாக இருந்தது. அவருக்கு உடல் சுகவீனமாம். நோய் என்னவென்று தெரியவில்லை. பல பிரயாணங்களை ரத்துச் செய்துள்ளார். வானவெளியில் சுற்றி பலரும் கூட, அவர் போட்ட திட்டப்படி செய்ய முடியாமற் போவதைப் பார்க்கிறோம். எல்லாரையும் ஆட்டி வைக்கும் வேறொரு பெரிய சக்தியின் விளையாட்டு ரகசியம் நமக்குப் புரியவில்லையல்லவா!

* * *

மகாகவி சுத்தானந்தபாரதியார் இலங்கைக்கு 18-ந்திகதி வரவேண்டியவர், பிரயாணத்தை ஒத்திவைத்துவிட நேரிட்டதாயும், நவம்பர் முதல் வாரத்தில் வரலாமென்றும் கூறப்படுகிறது.

## அம்மை நோய்க்கு இருவர் பலி

கொழும்பு, ஞாயிறு

வாரியப்பொல, குளியாப்பிட்டி பகுதியில் சென்ற வாரம் ஆறு பேருக்கு அம்மை நோய் கண்டதாகவும் இவர்களில் இருவர் மாண்டதாகவும் மற்றுமிருவர் அங்கொடை தொற்று நோய் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்படுகிறது.

இந்த நோய் பரவாவண்ணம் தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் பெருமளவில் அம்மைப் பால் கட்டப்பட்டுவருவதாகவும் அறிவிக்கப்படுகிறது.

## ஆசிரியர்களிடையே...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

படிக்கிறர்கள்? இப்போக்கில் மாற்றம் காணவேண்டும்.

வித்துவான் க. கி. நடராசன் பேசுகையில், கவிதைதான் சிறந்ததென்று சொல்ல முடியாதென்றும் பாட்டின் திறனை எடுத்துக் கூறும் உரையாராய்ச்சியும் பாராட்டப்படல் வேண்டுமென்றும் தமிழ் நாட்டு ஆராய்ச்சியாளர்களுக்கு பண்டிதர் அருளம்பலவனர் எந்த வகையிலும் குறைந்தவர் அல்ல என்றும் கூறினர்.

கூட்டத்தில் திரு. எஸ். அம்பிகைபாகன், வித்துவான் எஸ். இ. கந்தசாமியும் இன்னும் பலரும் பேசினர்.

தமக்களிக்கப்பட்ட பாராட்டுக்கு நன்றி தெரிவித்துப் பேசிய பண்டிதர் அருளம்பலவனர் சங்க இலக்கியங்களின் சிறப்பியல்புகளையும் எடுத்துக் கூறினர்.

# பெண்சாரணர்கள் நடனவிழா

## யாழ்ப்பாணத்தில் நடந்த கலைவிருந்து

யாழ்ப்பாணம், ஞாயிறு

"வடக்கிலுள்ள நாங்கள் கிணற்றுத் தவளைகளாக இருக்கவிரும்பவில்லை. வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்கு என்ற வேற்றுமைகளின்றி உலகனைத்தும் ஒரு குடும்பம் என்ற அடிப்படையில் தொண்டாற்றுவதே பெண் சாரணப்படையின் நோக்கமாகும்." என்றிவ்வாறு யாழ்ப்பாண ஜில்லா பெண்சாரணர் இயக்கக் கமிஷனர் ஸ்ரீமதி ஆர். பாமர், சென்ற சனிக்கிழமை, நகரமண்டபத்தில் நடைபெற்ற பெண் சாரணர் நடனவிழாவில் பேசுகையில் குறிப்பிட்டார்.

இலங்கை பெண் சாராணப் படைத் தலைமைக் கமிஷனரான ஸ்ரீமதி எஸ். ராஜசூரியா முதன் முறையாக யாழ்ப்பாணத்துக்கு விஜயம்செய்து, இங்கு பெண் சாரணர் இயக்கத்தின் முன்னேற்றத்தைப்பாராட்டி,தீவின் மற்றப்பகுதிகளுக்கு யாழ்ப்பாணம் முன்னின்று வழிகாட்டுவதாகக்கூறி, தமக்களித்த வரவேற்புக்கு நன்றிதெரிவித்தார்.

இராமநாதன் பெண்பாடசாலை, ஸ்ரான்லி மத்திய மகா வித்தியாலயம், பண்டத்தரிப்பு விடுதிப்பெண்பாடசாலை,கொக்குவில் இந்துக்கல்லூரி, பருத்தித்துறை மெதடிஸ்ட் பெண் பாடசாலை, சுண்டிக்குளிபெண் பாடசாலை, தெல்லிப்பழைமகாஜனக்கல்லூரி, உடுப்பிட்டி விடுதிப் பெண்பாடசாலை, தெல்லிப்பழையூனியன்கல்லூரி,யாழ்ப்பாணம் இந்துமகளிர் கல்லூரி, வேம்படி மகளிர்கல்லூரி, கோப்பாய் ஆசிரியர்பயிற்சிக்கலாசாலை, உரும்பிராய் இந்துக்கல்லூரி, சுளிபுரம் விக்டோரியாக் கல்லூரி, பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை, மட்டுவில் மகா வித்தியாலயம் முதலிய கல்லூரிகளைச்சேர்ந்த வழிகாட்டிகளும், சிறுதோழர்களும் விதவிதமான நடனங்கள் ஆடி மகிழ்வித்தனர்.

இதன்மூலம் வசூலான தொகையைக்கொண்டு, இந்த இயக்கத்துக்காக ஒரு மோட்டார்'வான்' வாங்க உத்தேசித்துள்ளதாகத் தெரிகிறது.

ஆசிரியருக்குக் கடிதம்

## இலங்கையும் இந்தியாவும் வேறல்ல!

இன்று தங்கள் பத்திரிகை தலையங்கத்தில் "இந்தியாவுக்கு வர்த்தகத் தூது" என்ற தலையங்கத்தைப் படித்தேன்.

இலங்கையும் இந்தியாவும் உடல் வேறாயினும் உயிர் ஒன்று என்று எழுதியதைப் பார்க்க மகிழ்ச்சி. ஆனல் அப்படி எண்ணுவது இந்தியா தான் என்பதைத் தங்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகின்றேன்.

இந்தியாவில் இறக்குமதியைத்தடைசெய்திருப்பதுஉண்மையே. அந்தச் சாமான் உலகில் எந்தப் பகுதியினருக்கும் இறக்குமதி செய்யவும் தடை. ஆனல் இலங்கையில் தடை செய்வதும் தீர்வையைக் கூட்டுவதும் அண்மைல் உள்ள 'தாய்நாடு' என்று வாய் அளவில் சொல்லும் இந்தியாவிலிருந்து இறக்கத் தான் தடை விதிக்கப்பட்டிருக்கிறது. இந்தியாவில் இறக்குமதி செய்ய எந்த நாட்டு வர்த்தகர்களும் அனுமதிக்கப்படுகிறர்கள்.

இலங்கையில் இலங்கையர் தான் முக்கிய சாமான்கள் இறக்குமதி செய்ய அனுமதிக்கிறர்கள்.

இந்தியாவில் உள்நாட்டுக்கும் இலங்கைக்கும் தபால் விகிதம் ஒன்று தான். இலங்கையில் இந்தியாவுக்குகூடுதல்விகிதம் என்பது தெரிந்ததே.

இந்தியா பெருந்தன்மையுடன் நேசக்கரம் நீட்டுகிறது. இலங்கை பொருளாதாரம் என்று சொல்லி இந்தியர்களையும் இந்தியாவையும் வெறுக்கிறது.

யாழ்ப்பாணம் அ. சங்கரன்

14-10-61

# தி: மு. க. அங்கத்தினர் கத்திக்குத்து

## 45 பேர் கைது

சென்னை, அக். 14

சென்னை நகரசபை தி. மு. க. அங்கத்தவர் திரு. எஸ். கபாலி நேற்று கத்தியால் குத்தப்பட்டதைத் தொடர்ந்து பெரியமேட்டு பகுதியில் கலவரம் ஏற்பட்டது சம்பந்தமாக பொலிஸார் 45 பேரைக் கைது செய்துள்ளனர். அவர்களில் 35 பேர் கலவரம் செய்ததாகக் கூறப்படுகிறது. 10 பேர் தடுப்புநடவடிக்கையாகக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தக் கத்திக்குத்து சம்பவம் சம்பந்தமாக பெரியமேட்டைச்சேர்ந்த எஸ். தாஸ் (26) என்பவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்டுள்ளவர்களில் சிலர் தி. மு. க. வைச் சேர்ந்தவர்கள் என்றும் சிலர் காங்கிரஸ்கட்சியைச் சேர்ந்தவர்கள் என்றும் கூறப்படுகிறது.

வேணுகோபால் என்ற மற்றொரு நபர் கத்தியால் குத்தப்பட்டாராம். அவர் ஜெனரல் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

திரு. கபாலியின் உயிருக்கு அபாயமில்லை என்று கூறப்படுகிறது.

பெரியமேட்டுப்பகுதியில் பலத்த பொலிஸ் பந்தோபஸ்து ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## புதிய ஜே.பி.

கொழும்பு, ஞாயிறு

இந்தியன் ஓவர்சீஸ் வங்கியைச் சேர்ந்த திரு. சி. நடேசன், தற்காலிக கொழும்பு நீதியரசர் திரு. வி. சிவசுப்பிரமணியத்தின் முன்னிலையில் தமது ஜே. பி. பதவிக்கான சத்தியப்பிரமாணத்தைச் செய்துகொண்டார். திரு. நடேசன் இலங்கை அபிவிருத்தி நிதிக் கார்ப்பரேஷனில் ஒரு டைரக்டராவர். அத்தோடு காசநோய் தடுப்புச் சங்கத்தின் கொழும்புக் கிளையின் தனதிகாரியுமாவர்.

## நுவரெலியாவில் 'அப்பிள்'

நுவரெலியா, ஞாயிறு

நுவரெலியா சந்தபோலப் பகுதியில் பல தோட்டக்காரர் அப்பிள் பயிரிடுகை செய்து பரீட்சித்துப்பார்த்தார்கள். அதன்விளைவாக 'அப்பிள்' பயிரிடுகையை அங்கு வெற்றிகரமாகச்செய்துவரலாம் என்ற முடிவுக்கு வந்துள்ளார்கள். மேற்படி பரீட்சையினல் 'அப்பிள்' இங்கு நன்ருக விளையும் எனக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

## இரட்டையருக்கு 74 வயது

சென்னை, ஞாயிறு

இரட்டையாகப் பிறந்த டாக்டர் ஏ. ராமசாமி முதலியார், டாக்டர் ஏ. லட்சுமணசுவாமி முதலியார் இருவருக்கும் இன்று 74 வது வயது நிரம்புகிறது. நாட்டில் மட்டுமன்றி சர்வதேச துறையிலும், உலகிலேயே சமமான புகழ் எய்தியுள்ள இரட்டையர்கள் இவர்கள்தான் என்று நம்பப்படுகிறது.

# பொலிஸ் உத்தியோகத்தர் தாக்கப்பட்டனராம்

## வசாவிளானில் சம்பவம்; சந்தேகத்தின்மீது இருவர் கைது

மாவிட்டபுரம், ஞாயிறு

வசாவிளானில் உள்ள ஓர் நெசவு சாலையில் நடைபெற்ற நாடகத்துக்குக் கடமையாற்றச் சென்ற காங்கேசன் துறையைச் சேர்ந்த இரு பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் எதிர்பாராத விதமாக ஆறு நபர்களால் வெள்ளிக்கிழமை இரவு தாக்கப்பட்டதாகப் அறிவிக்கப்படுகிறது.

டி. குமாரசாமி, பி. பெரேரா ஆகிய இருவருமே தாக்குதலுக்குள்ளாகின பொலிஸ் உத்தியோகத்தர்களாவர்.

சந்தேகத்தின் பேரில் வசாவிளானைச் சேர்ந்த நாகமுத்து சுப்பிரமணியம், கந்தையா சிதம்பரப்பிள்ளை ஆகிய இருவரையும் பொலிசார் கைது செய்துள்ளனர்.

மேலும் பலாலிதெற்கைச் சேர்ந்த முத்ததம்பி நவரத்தினம், செல்லையா நாகேத்திரன், தம்பர் குணரத்தினம், கந்தையா கந்சாமி ஆகிய நால்வரையும் பொலிசார் தேடுகின்றனர். இவர்கள் தலைமறைவாகத் திரிவதாகக் கூறப்படுகிறது.

பெரேரா காயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

# சைக்கிள் திருடினராம்

## 3 மாதச் சிறை

சாவகச்சேரி, சனி

ஆவரங்காலைச் சேர்ந்த முருகன் மார்க்கண்டு என்பவருக்குச் சொந்தமான 240 ரூபா பெறுமதியான சைக்கிள் வண்டியைத் திருடியதாகவும் களவு போன சைக்கிளைத் தன்வசம் வைத்திருந்ததாகவும் நுணுவிலைச் சேர்ந்த வைரவன் சுப்பையா என்பவர் மீது குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கு சாவகச்சேரி நீதவான் திரு. ஏ. வைத்திலிங்கம் முன்னிலையில் விசாரணைக்கெடுத்துக்கொள்ளப்பட்டது.

விசாரணையில் எதிரியைக் குற்றவாளியாகக் கண்டு முதலாவது குற்றத்துக்கு மூன்று மாதக் கடுழியச் சிறைத் தண்டனையும் இரண்டாவது குற்றத்துக்கு மூன்றுமாதக் கடுழியச் சிறைத் தண்டனையும் விதித்து ஏககாலத்தில் தணடனையை அனுபவிக்க வேண்டுமென்று நீதவான் உத்தரவிட்டார்.

# சம்பளப்பட்டியல் வைத்திருக்க தவறியவர்களுக்கு ரூ. 25 அபராதம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

தொழிலாளர் சம்பளப்பட்டியல் தயாரித்து வைத்திருக்கத் தவறியதாக மாங்குளத்தைச் சேர்ந்த கடைச் சொந்தக்காரரான எஸ். சிவசம்பு என்பவர் மீது தொழில் இலாகாவினல் தொடரப்பட்ட வழக்கு யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் திரு. அரசு வால்டன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

தொழிலாளர் சம்பளப்பட்டியலை தாம் இப்பொழுது தயாரித்து வைத்திருப்பதாக எதிரி மாஜிஸ்டிரேட்டிடம் தெரிவித்தார்.

மாஜிஸ்டிரேட் ரூ. 25 அபராதம் செலுத்துமாறு உத்தரவிட்டார்.

# முல்லைத்தீவுக்கு புளி வந்தது

முள்ளியவளை, சனி

முல்லைத்தீவுப் பகுதியில் சமீபகாலமாக நிலவி வந்த புளித்தட்டுப்பாடு, இப்போது ஓரளவு நீங்கியுள்ளது.

முல்லைத் தீவுக் கூட்டுறவுப் பண்டசாலைச் சமாஜம் ஓரளவு புளியைத் தருவித்து, கூட்டுறவுப் பண்டசாலைகளும், உத்தரவு பெற்ற வியாபாரிகளுக்கும் வழங்கியுள்ளது.

அந்தப் புளியில் உப்புக் கலப்பு இருப்பதாகவும் குறை கூறப்படுகிறது.

# "சகல சமயங்களையும் கடந்த பொருள்தான் சக்தி"

## நவராத்திரி தொகுப்பு நூல் விழாவில் பேச்சு

நாவலப்பிட்டி, சனி

"சகல சமயங்களையும் கடந்த பொருள்தான் சக்தியென்பது. பல தர்க்கம்புரிபவர்களும் கடவுளே இல்லையென்று வாதிப்பவர்களும்கூட சக்தி ஒன்று உண்டென்பதை ஒப்புக்கொள்கின்றனர்."

இவ்வாறு கவிஞர் ஸ்ரீ பரமஹம்சதாசன் நாவலப்பிட்டி நவராத்திரி விழாவில் நவராத்திரி தொகுப்பு நூலொன்றை வெளியிட்டுப் பேசுகையில் கூறினர். "நவராத்திரி தினத்தில் எத்தகைய பாடல்களை ஒழுங்காக படிக்கலாம் என்பதை பலர் அறியாத நிலைமையில் இத்தகைய நூலொன்றை தொகுத்தளித்த ஆத்ம ஜோதி ஆசிரியர் திரு. நா. முத்தையாவையும் அவர் செய்துவரும் சமயப்பணியையும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேம்" என்று அவர் மேலும் கூறினர். கதிரேசன் கல்லூரி அதிபர் திரு. க சபாஆனந்தர் முதலாவது நூலை விலைக்குப் பெற்று நல்வாழ்த்துக் கூறினர். ஸ்ரீ தியாகராஜ சுவாமிகள் இசை விருந்தளித்தார்.

கவிஞர் ஸ்ரீ பரமஹம்சதாசன் மேலும் கூறியதாவது:-

இறைவனை பக்திசெய்பவர்கள் ஏதாவது ஒருமுறை கொண்டாடி பக்திசெய்வது வழக்கம். இத்தகைய தொடர்புகளுள் தாய் என்று சொல்லி வழிபடுவதே தலைசிறந்தது. தாய்க்கும் பிள்ளைக்கும் இடையே உள்ள இணக்கம் ஒப்பற்றது. உலகில் வேறு எதையும் அதனேடு சீர்தூக்க முடியாது. ஆண்டவனிடத்தில் அடிமையானவன் பயபக்தி கொண்டு சற்று எட்ட நிற்கிறர். தந்தையிடத்திலும் தனயன் மிக நெருங்கி உறவாடுவதில்லை. வயது முதிர முதிர பிதாவுக்கும் பிள்ளைக்குமிடையே வேற்றுமை அதிகரித்துவிடுகிறது. ஆனல் அன்னையின் இயல்பு என்றைக்கும் மாருதது. தாயின் தன்மையுடைய தெய்வத்தை வழிபடுவது மிக எளிது. பெற்றவளோடு பிள்ளைகள் பழகுவதற்கு சட்டத்தில் ஒன்றும் கிடையாது.

அன்பு, அறிவு, வீரம் என்பன இருந்தால்தான் வாழ்க்கை பயனுடையதாக அமையும். இவற்றை தரக்கூடிய சக்தியுடையவள் பராசக்திதான். இவ் வாழ்விலும், அடுத்த உலக வாழ்விலும் நாம் நன்ருக வாழ்வதற்கு சக்திதான் ஆதாரம். சக்தி படைத்தவன்தான் நன்ருக வாழ்கிருன். சக்தியுள்ள வல்லரசுகள்தான் போட்டிபோடுகின்றன. நேர்மையான வாழ்க்கையை அமைத்துக்கொள்வதே பராசக்திக்கு நாம் செய்யும் வணக்கமாக இருக்கவேண்டும்.

### அணுசக்தியும் சக்தியின் அருள்

விஞ்ஞான ஆராய்ச்சியினல் கிடைத்த அணுசக்தியும் பராசக்தியின் அருளே. இதனை மக்களின் நல்வாழ்விற்கு பயன்படுத்த நல்லறிவு கொடுப்பவளும் பராசக்திதான். அழிவுப் பாதையில் செல்லாமல் ஆக்க வழிகளுக்கு இச் சக்தியைப் பயன்படுத்தவேண்டும். அசுர சக்தியை யழிக்க அமர சக்தி பெறுவோம். பராசக்தி வழிபாட்டினல்தான் அமரசக்தியைப் பெறமுடியும். வீடுகள் தோறும் கலையின் விளக்கமாக எடுக்கப்படும் இவ் விழா எமது ஆத்ம சக்திகளை ஒன்று படுத்துகிறது. இந்த ஒன்றுபட்ட சக்திதான் எதிர்கால முன்னேற்றத்திற்கு வேண்டப்படுவது.

# அச்சுவேலியில் கார் சாரதி படுகொலை

## சந்தேகத்தின்மீது இருவர் கைது

### மேலும் சிலரைக் கைதுசெய்ய உத்தரவு

அச்சுவேலி, ஞாயிறு

அச்சுவேலியைச் சேர்ந்த கார் சாரதியான சின்னத்தம்பி செல்லையா என்பவர் கொலை செய்யப்பட்டது சம்பந்தமாக சந்தேகத்தின் மீது பத்தமேனியைச் சேர்ந்த மயிலு சின்னத்தம்பி, இளையதம்பி சின்னத்தம்பி ஆகியோரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு 8 மணியளவில் அச்சுவேலி பஸ் நிலையத்துக்கும் அச்சுவேலி கிறிஸ்தவ கல்லூரிக்குமிடையில் தொண்டமானறு அச்சுவேலி வீதியில் செல்லையா அடித்துக்கொல்லப்பட்டுக் கிடப்பதாகக் காங்கேசன்துறைப் பொலிசாருக்குக் கிடைத்த தகவலின்படி அவர்கள் ஸ்தலத்துக்குச் சென்று புலன் விசாரணை செய்தனர்.

மல்லாகம் பதில் மாஜிஸ்டிரேட் திரு. எஸ். இளையதம்பி ஸ்தலத்துக்குச் சென்று விசாரணை செய்தார்.

பருத்தித்துறை சட்ட வைத்திய அதிகாரி பிரேத பரிசோதனை நடத்தினர்.

35 வயதான செல்லையாவைக் கொலை செய்ததாகச் சந்தேகத்தின்மீது மயிலு சின்னத்தம்பி, இளையதம்பி சின்னத்தம்பி ஆகியோரையும் வேறு சிலரையும் கைது செய்யுமாறு பதில் மாஜிஸ்டிரேட் உத்தரவிட்டார்.

பொலிஸார் தொடர்ந்தும் புலன் விசாரணை செய்துவருகின்றனர்.

# அரிசி ஏற்றிச் சென்ரூர்

## அபராதம் ரூ. 200

சாவகச்சேரி, சனி

இருபது மூட்டை இறக்குமதி அரிசியை உத்தரவில்லாமல் எடுத்துச் சென்றதாக டபிள்யூ. ஏ. பெர்ஞண்டோ, எஸ். குணரத்தினம், ஆர். அழகர்சாமி, ஆகியோர் மீது குற்றம் சாட்டி உணவு விலைக்கட்டுப்பாட்டுப் பரிசோதர் திரு. எம். கனகரத்தினத்தால் தொடர்ந்த வழக்கு சாவகச்சேரி நீதிவான் திரு. ஏ. வைத்திலிங்கம் முன்னிலையில் விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்பட்டது.

விசாரணையின் போது மூன்ருவது எதிரியாகிய ஆர். அழகர்சாமி குற்றத்தை ஒப்புக் கொண்டதால் நீதிபதி ரூபா 200 அபராதம் செலுத்துமாறு உத்தரவிட்டு முதல் இரண்டு எதிரிகளையும் விடுதலை செய்தார்.

இருபது மூட்டை அரிசியும் பறிமுதல் செய்யப்பட்டது.

புதுடில்லி, அக். 15

பீகாரில் சமீபத்திலேற்பட்ட வெள்ளத்தினல் அங்கு நிகழ்ந்த பெரும் சேதத்துக்கு கவலை தெரிவித்து கான ஜனதிபதி டாக்டர் நிக்ருமா பாரத ஜனதிபதி ராஜன்பாபுவுக்கு ஒரு செய்தி அனுப்பியுள்ளார்.


10,000,000 மக்களும் விரும்பி வாங்குவன!
இலங்கை முழுவதும் புகழ் பரப்புவன!
எவை?

டொலர்

ALUMINIUM INDUSTRIES (CEYLON) LTD.
ONE DOLLAR
DOLLAR BRAND

பவுண் அடையாளம் உள்ள
அலுமினியப் பாத்திரங்களே!
ஏன்?

டொலர் அலுமினியம் மாற்று உயர்ந்தது சுத்தம் உள்ளது!
டொலர் அலுமினியம் அழகு அமைப்பு கண்கவர்ச்சி உள்ளது!!
டொலர் அலுமினியம் உறுதி உழைப்பு உத்தரவாதம் உள்ளது!!!

எல்லாவற்றிற்கும் மேல்
உங்கள் தாய்ப் பொன்னுட்டில் மாவிட்டபுரத்தில் நவீன முறையில் செய்யப்படுவது!
டொலர் பவுணை பார்த்து வாங்குங்கள்
எங்கும் கிடைக்கும்
டொலர் மாத்திரமே
உத்தரவாதமானது!

தயாரிக்குமிடம்:
அலுமினியம் இன்டஸ்ரீஸ்லிமி.,
மாவிட்டபுரம். யாழ்ப்பாணம்
J.D. 3.



குனேகா செண்டுகள்
வாழ்க்கை மலர்ச்சியுற உலகப் புகழ்பெற்ற
குனேகா மருக்கொழுந்து உபயோகித்து ஆனந்தமடையுங்கள்
தயாரிப்பவர்கள்:
குனேகா அடையார், மதராஸ் 20.
இலங்கை சோல் ஏஜண்டுகள்:
ஜெகஜோதி அன் கோ,
குருநெனியா.
கொழும்பு ஸ்டாக்கிஸ்ட்:
செல்வாஸ் (SELVAS)
(பிரபல ஜவுளித் தினிசு விற்பனையாளர்கள்)
31, செட்டியார் தெரு, கொழும்பு.

## வெற்றி தோல்வி இன்றி முடிவடைந்தது

ஊர்காவற்றுறை, வெள்ளி சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரி உதைபந்தாட்டக்கோஷ்டிக்கும், வேலணை மத்தியமகா வித்தியாலய உதைபந்தாட் கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற சிநேகபூர்வமான உதைபந்தாட்டம் வெற்றி-தோல்வியின்றி முடிவடைந்தது.

வேலணை மத்திய மகா வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிக்கு உடற்பயிற்சி போதனாசிரியர் திரு. தியாகராசா மத்தியஸ்தராகக்கடமையாற்றினர்.

## வேலணை மத்திய கல்லூரி வெற்றி

ஊர்காவற்றுறை, வெள்ளி வேலணை அரசினர் மத்திய கல்லூரி மாணவிகள் கோஷ்டிக்கும், சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி மாணவிகள் கோஷ்டிக்குமிடையே நேற்று மாலை நடைபெற்ற சிநேகபூர்வமான வலைப்பந்தாட்டப் போட்டியில் வேலணை மத்திய கல்லூரிக் கோஷ்டி வெற்றிபெற்றது. வேலணை மத்திய கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிக்கு உடற்பயிற்சி ஆசிரியர் திரு. தியாகராசா மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

## மகாஜனக்கல்லூரி வெற்றி

காங்கேசன்துறை, வெள்ளி யாழ்ப்பாணபாடசாலைகளின் விளையாட்டுச்சங்கத்தின் ஆதரவில் மகாஜனக்கல்லூரி இரண்டாம் பிரிவு உதைபந்தாட்டக் கோஷ்டிக்கும் சாவகச்சேரி இந்துக்கல்லூரி இரண்டாம் பிரிவுக்கோஷ்டிக்கும் இடையில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் மகாஜனக்கல்லூரி 7-0 கோல்களால் வெற்றியீட்டியது. திரு. பி. ஏகாம்பரம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

## 'உப உணவுப் பொருள்கள் இல்லையேல் அபராதம்'

### காரியாதிகாரி எச்சரிக்கை

முள்ளியவளை, ஞாயிறு பல கடைகளில், உப உணவுப் பொருள்கள் கிடைப்பதில்லை எனப் பொது மக்கள் உணவுக் கட்டுப்பாட்டதிகாரிக்குப் புகார் செய்துள்ளதாகவும், அதனுல் ஒவ்வொரு கூட்டுறவுப் பண்டசாலையும், உத்தரவு பெற்ற கடைகளும், வார முடிவில் குறைந்தது 7 இருத்தல் உப உணவுப் பொருள்கள் கையிருப்பில் வைத்திழிக்க வேண்டுமெனவும், அங்ஙனம் செய்யத் தவறுபவர்கள் வவனியா உணவுக்கட்டுப்பாட்டதிகாரிக்கு அறிவிக்கப்பட்டு, ரூ. 5000த்துக்குக் குறையாத அபராதம் விதிக்கப்படுவர் எனவும், கரைதுறைப்பற்றுக் காரியாதிகாரி, எல்லாக் கூட்டுறவுக் கடைகளுக்கும், உத்தரவுபெற்ற வியாபாரிகளுக்கும் அறிவித்துள்ளார்.

## சங்கீதப்போட்டி

தெல்லிப்பழை, வெள்ளி தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் இல்லங்களுக்கிடையே நடத்தப்பட்ட சங்கீதப் போட்டிகளில் துயைப்பா இல்லம் முதலிடத்தைப் பெற்றுள்ளது.

## நரிகளுக்கு பைத்தியம்!

சாவகச்சேரி, சனி கல்விளான் பகுதியில் கடும் வரட்சியேற்பட்டிருப்பதால் காடுகளில் வசித்து வந்த நரிகளுக்குக் குடி தண்ணீர் இல்லாமல் விசர் பிடித்துக் கிராமங்களில் புகுந்து நாய், மாடு, எருமை, கோழி ஆகியவைகளைக் கடித்து வருகின்றன. சென்ற இரவு கதிரன் செல்வரத்தினம் என்னும் பத்து வயதுச் சிறுவன் பைத்தியம் பிடித்த நரியினல் கடிக்கப்பட்டார்.


நான் விரும்புவது

நெஸ்டோமோல்ட்

அது எனக்கு எவ்வளவோ நன்மையளிக்கின்றது...




நெஸ்டோமோல்ட் ஒரு உன்னத பால் ஆகாரம். இது மோல்ட்டட் பார்லி மற்றும் கோதுமை மாவுடன் முழுப் பாற்கட்டிகளை ஒன்று சேர்த்து கவனமாகத் தயாரிக்கப்பட்ட ஒரு உற்பத்தியாகும். இதில் விட்டமின் A, B2, மற்றும் E அதோடு கல்ஸியம், மக்னீஸியம், ஆகியவற்றின் பெறுமதியான ஓர்கனிக் பொஸ்பேட்டுகள்மற்றும் ஒவ்வொரு அவுன்ஸ் பவுடருக்கும் 137 மேலதிக விட்டமின் B சத்துக்கள் உள்ளன.

உற்பத்தி செய்து உத்தரவாதமளிப்பவர்கள்

நெஸில்ஸ்

இலவச சாம்பிள்

இலவச நெஸ்டோமோல்ட் சாம்பிளைப் பெற உங்களது பெயர் விலாசத்தையும் அதோடு தபால் கட்டணமாக 25 சதத்திற்கு முத்திரைகளும் அனுப்பி வைக்கவும்.

நெஸில் புரோடக்ட்ஸ் (சிலோன்) லிமிட்டெட்
த. பெ. 189,
கொழும்பு.

குழந்தைகள், வாலிபர், குடும்பப் பெண்கள் ஆகிய எல்லோருமே விரும்பி அருந்தும்இந்த நெடோமோல்ட் அபார நன்மை அளிக்க வல்லது. சூடானுலென்ன, ஐஸ் போன்ற குளிர்மையானுலென்ன, இழந்த சக்தியை மீட்டுத் தரவும் ஊக்கமூட்டவும் சுவை நிரம்பிய நெஸ்டோமோல்டுக்கு நிகர் எதுவுமே கிடையாது. நெஸ்டோமோல்டில் ஒரு ஆச்சர்யமென்னவென்ருல், உங்களுக்கு நன்மையானவை யாவும் அதில் அடங்கியிருப்பதுதான். இத்தனைக்கும் அதன் சுவை ஒரு தனி ரகம்.

நெஸ்டோமோல்ட்

விட்டமின் B அடங்கியது.


## வானெலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

**திங்கள் 16-10-61**

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 கிறிஸ்தவநற்சிந்தனை, 7-15 காலைக் கதிர், 7-30 திரைஇசை, 8-00 வீணை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 ஒலிப்பதிவுகள், 5-45 திரைஇசை, 6-15 கிராமசஞ்சிகை, 6-45 வாத்தியக் கோஷ்டி.

இரவு 7-00 நேயர்விருப்பம், 7-30 எம். சோமசுந்தரம் - பாட்டு, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 எவ். எக்ஸ். ஒ நடராஜன் - பேச்சு, 9-30 ஏ. நடராஜா - பாட்டு.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2, இரவு 7-15.)

காலை 6-45 மங்களஇசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 வாத்தியஇசை, 7-10 நிகழ்ச்சிக்குறிப்புகள், 7-30 விழுப்புரம் ஆர். வைத்தியநாதஸ்வாமி - பாட்டு.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 1-00 ராமநாதபுரம் அலமேலு திருமலை - பாட்டு, 1-50 என். ரமணி - புல்லாங்குழல், 1-20 குரல்இசை.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடகசங்கீதம்), 5-45 இசைப் பயிற்சி, 6-15 கிராமநிகழ்ச்சிகள்.

இரவு 7-30 இம்மாதப் பாடல், 7-35 நல்லுரை, 8-00 ராமநாதபுரம் அலமேலு திருமலை - பாட்டு, 8-30 விழுப்புரம் ஆர். வைத்தியநாதஸ்வாமி - பாட்டு, 9-15 சங்கீதஉபன்யாசம்.

## அருள்நெறிக் கழகம்

மாவிட்டபுரம், ஞாயிறு மாவை-கொல்லங்கலட்டி அருள்நெறிக் கழகத்தின் மூன்ருவது வருடாந்தக் கூட்டம் சங்கத்தலைவர் திரு. வ. சரவணமுத்து ஜே. பி. அவர்களின் தலைமையில் நடைபெற்றபோது பின்வருவோர் 1961—62-ம் வருட உத்தியோகஸ்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. வ. சரவணமுத்து ஜே. பி.

துணைத்தலைவர்கள்: பண்டிதர் வே. சங்கரப்பிள்ளை, திருவாளர்கள் இ. துரைசாமி, ந. சி. சிவசுப்பிரமணியம், ஆ. வே. சிற்றம்பலம், இ. விஸ்வநாதன், ஆ. கிருஷ்ணசாமி.

பொதுச் செயலாளர்: திருவாளர்கள் சி. சிவமகாராஜா, ச. விமலராஜா. பொருளாளர்: திரு. த. தருமரத்தினம், துணைப்பொருளாளர்: திரு. சி. பரமசிவம், பரிசோதகர்: திரு. வே. சிவசுப்பிரமணியம், நிர்வாகக்குழு: திருவாளர்கள்: க. சு. நடராசா, கா. கந்தையா, பொ. நாகரத்தினம், வ. வயித்திலிங்கம், வே. வன்னியசிங்கம், சி. முருகையா, சி. செல்லத்துரை, ந. கனகசேகரம், சு. கந்தையா, த. ஆறுமுகம்பிள்ளை.

# கலை அரங்கம்

## ‘சிறுத்தைக்கும் - புலிக்கும் இடையில் சரோஜாதேவி’

### ‘தேவர் பிலிம்ஸ்’ படத்தில் அதிர்ச்சிதரும் காட்சி

தேவர் படநிலையத்தின் ‘தாய்சொல் தட்டாதே’ படத்திற்கான பயங்கரமான சண்டைக் காட்சிகள் சமீபத்தில் படமாக்கப்பட்டன.

சிறுத்தைப் புலியும், முள்ளம் பன்றியும் ஒன்றோடொன்று பயங்கரமாகச் சண்டைசெய்த காட்சி இவ்வாரம் வாகினியில் படமாக்கப்பட்டது.

சிறுத்தையையும், முள்ளம் பன்றியையும் உண்மையிலேயே மோதவிட்டார் தயாரிப்பாளர் தேவர். ஆத்திரத்துடன் முள்ளம் பன்றி தன் உடலிலுள்ள முட்களால் சிறுத்தையின் மீது மோதியது. புலியும் கோபத்துடன் சீறியது. இவைகளுக்கிடையே சிக்கிக்கொண்டார் படத்தின் கதாநாயகி சரோஜாதேவி. அச்சத்தால் மிரண்ட சரோஜாதேவி கதறிவிட்டார். அவ்வழியே வந்த புரட்சி நடிகர் தம் கையிலிருந்த துப்பாக்கியால் விலங்குகளை நோக்கிச் சுட்டார் முள்ளம் பன்றி இறந்தது. சிறுத்தை மிரண்டு ஓடியது. சரோஜாதேவி காப்பாற்றப்பட்டாள். இக் காட்சிகளை விறுவிறுப்பான முறையில் படமாக்கினர் ஒளிப்பதிவாளர் மூர்த்தி.

இப் படத்தில் துப்பறியும் அதிகாரியாகப் புரட்சி நடிகரும், அவருடைய காதலியாக சரேக்ஜாதேவியும் நடிக்கின்றனர்.

நடிகவேள் எம். ஆர். ராதா, அசோகன், கண்ணும்பா, குலதெய்வம் ராஜகோபால் ஆகியோர் நடிக்கும் “தாய்சொல் தட்டாதே” தீபாவளியன்று வெளிவருமாம். திரைக்கதை வசனத்தை ஆரூர்தாஸ் எழுதியுள்ளார்.

எம். ஏ. திருமுகம் இயக்கும் இப்படத்தின் பாடல்களைக் கண்ணதாசன் இயற்றியுள்ளார். இசை கே. வி. மகாதேவன்.

---

## நவராத்திரி கலைவிழா

குரும்பசிட்டி உதயதாரகை சனசமுக நிலையம் நவராத்திரி தினத்தை முன்னிட்டு செவ்வாய்க்கிழமை மாலை கலைவிழாவொன்றினை நடாத்தவிருக்கின்றனர். குரும்பசிட்டி மகாதேவா வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெறவிருக்கும் இவ்விழாவிற்கு யாழ் நகரபிதா திரு. ஸ்ரீ எஸ். துரைராசா தலைமை வகிப்பார். உடுப்பிட்டி எம். பி. திரு. மு. சிவசிதம்பரமும் பேசுவார். ஜெயசக்தி நாடகமன்றத்தினரின் “பெட்டீசம் போட்டு மடக்குவேன்” என்ற நகைச்சுவை நாடகமும், தெல்லிப்பழை மேற்கு நாடக மன்றம் அளிக்கும் “அப்ப வாறேன் பிள்ளை”, கிராமிய நாடகம் கொண்டாவில் ஞானோதய மன்றத்தாரின் “ஹரிச் சந்திரா” கொட்டகைக் கூத்தும் நடைபெறுமென்றும் அறிவிக்கப்படுகிறது.



## இந்தியில் ‘யானைப்பாகன்’

தமிழில் வெளிவந்த தேவர் படநிலையத்தின் ‘யானைப் பாகன்’ ‘மாகூத்’ என்ற பெயரில் இந்தியில் ‘டப்’ செய்யப்பட்டு வருகிறது.

சரோஜாதேவி கதாநாயகியாக நடித்துள்ள இப்படம் இயற்கைக் காட்சிகள் நிறைந்தது.

ஏ. வி. எம். படத் தயாரிப்பு நிலையத்தின் அடுத்த இந்திப் படமாக “மாகூத்” வெளிவருமாம்.

---

## இலட்சுமியின் “பெண் மனம்”

### நட்சத்திர நடிகர்கள் நடிப்பார்கள்

“தாயில்லாப் பிள்ளை”யைத் தயாரித்த பிரசாத் மூவிசார் அடுத்தபடியாகப் “பெண் மனம்” படத்தைத் தயாரிக்கத் திட்டமிட்டுள்ளனர். நாவலாசிரியை “இலட்சுமியின் மூலக் கதைக்கு கலைஞர் மு. கருணாநிதி வசனமெழுதுகிறார்.

பெரிய நட்சத்திரங்களின்றி “தாயில்லாப் பிள்ளை”யைத் தயாரித்து வெளியிட்ட பிரசாத் “பெண் மனத்”தில் நட்சத்திர நடிக, நடிகைகளையே நடிக்க வைப்பார் என்று தெரிகிறது. நடிகர் திலகம் சிவாஜி கணேசன் இதில் கதாநாயகனாக நடிப்பாராம்.

கதையின் கருத்திலும், நடிப்பிலும், இசையிலும் படமாக்கப்பட்ட முறையிலும் “தாயில்லாப் பிள்ளை” எவ்வளவோ சிறப்பாக இருந்தும் ரசிகர்கள் தங்கள் பேராதரவை போதியளவு கொடுக்க முன்வராததால்தான் “பிரசாத்” மீண்டும் முன்னணி நட்சத்திரங்களையே நாடுகிறாரென்று கூறப்படுகிறது.

---

## வளரவிருக்கும் கற்பகம்

டவர் படநிலையத்தாரின் முதல் சமூகப் படமான ‘கற்பகம்’ விரைவில் வளரத் தொடங்குமென அறிவிக்கப்படுகிறது.

நடிகவேள் எம். ஆர். ராதாவின் நாடகக்குழுவின் நிர்வாகி சாமண்ணா தயாரிக்கவிருக்கும் இப்படத்தை ஏ. பி. நாகராஜன் டைரக்ட் செய்வார்.

## ‘எதையும்தாங்கும் இதயம்’ வளர்கிறது

உதயசூரியன் படநிலையத்தின் ‘எதையும் தாங்கும் இதயம்’ படத்திற்கென எஸ். எஸ். இராஜேந்திரனும் விஜயகுமாரியும் நடித்த காதல் காட்சிகள் சமீபத்தில் மெஜஸ்டிக்கில் படமாக்கப்பட்டன.

ஏழை மாடசாமியாக எஸ். எஸ். இராஜேந்திரனும், சீமானின் புதல்வி தேன்மொழியாக விஜயகுமாரியும் நடிக்கின்றனர். ராமச்சந்திரனின் அன்னையாக பி. எஸ். சரோஜா நடிக்கிறார். நடிகவேள் எம். ஆர். ராதா இப்படத்தில் முக்கியமானதோர் பாகத்தில் நடிக்கிறார்.

கே. ஆர். ராமசாமி, சந்திரகாந்தா இருவரும் இணையாக நடிக்கும் “எதையும் தாங்கும் இதயம்” படத்தின் வசனங்களை அறிஞர் அண்ணாத்துரை எழுதுகிறார்.

இப்படத்தை திரு. ப. நீலகண்டன் டைரக்ட்டு செய்து வருகிறார். இசையமைப்பு டி. ஆர். பாப்பா. ஒளிப்பதிவு ஜி. துரை.

சுமார் 12000 அடிகள்வரை வளர்ந்துள்ள “எதையும் தாங்கும் இதயம்” திபாவளிக்குப்பின் வெளிவருமென்று தெரிகிறது.

---

## நடிகர் சங்கத்தின் படம்

தென்னிந்திய நடிகர் சங்கத்தின் புதியகட்டட நிதிக்கென தென்னிந்திய நடிகர் சங்கத்தார் விரைவில் ஒரு தமிழ்ப் படத்தைத் தயாரிக்கத் திட்டமிட்டுள்ளனர்.

புரட்சி நடிகர் எம். ஜி. ஆர்., நடிகவேள் ராதா, தங்கவேலு, நம்பியார், அசோகன் ஆகியோர் இலவசமாக இப்படத்தில் நடிக்க இசைந்துள்ளார்கள் எனத் தெரிகிறது. இதற்கான ஏற்பாடுகளை நிறைவேற்ற தெ. இ. நடிகர் சங்கத் தலைவர் எம். ஜி. ஆர். தக்க நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்.

நடிகர் சங்கக்கட்டடத்திருப்பணிக்கு உதவ, விருப்புவெறுப்பின்றி ஒத்துழைக்க கலைஞர்கள் அனைவரும் முன்வரவேண்டும் என்று புரட்சி நடிகர் கூறுகிறார்.

இப்படத்தினால் கிடைக்கும் வருமானத்தில் கட்டடம் உருவாக்குவதுடன் வாழ்வில் வசதிக் குறைவாக உள்ள நடிக, நடிகைகளின் நலனுக்கான நிதியும் ஒதுக்கப்படுமாம். இன்று சென்னையில் கலைஞர்கள் பலர் சாதாரண நடுத்தரக் குடும்பத்தினரையும் விட தாழ்வான நிலையில் கஷ்டப்படுகின்றனர்.

நடிப்புப் பயிற்சிக்கூடமொன்றும் நாடக அரங்கமும் கட்டுவதற்கான ஏற்பாடுகளும் நடைபெற்று வருகின்றன.

## சிறுவன் கலைத்திறன்

வட இலங்கைச் சங்கீத சபை, சென்ற பத்துப் பன்னிரண்டு வருடங்களாக இசைப் பரீட்சை நிறுவியும், இசை விழாக்கொண்டாடியும் இசையரங்கேற்றம் வைத்தும் இசைக் கலைக்கு ஒப்பற்ற தொண்டினை ஆற்றிவருகின்றது. இவ்வகையில் இச் சபையினரால் மிருதங்கத்தில் முதன் முதலாக அரங்கேற்றப்பெற்ற செல்வன் பிரகலாதனின் மிருதங்கவாசிப்பு உண்மையாகவே நல்ல முறையில் அமைந்திருந்தது. சித்திரப்பதுமையோ என நினைக்கும் வண்ணம் கம்பீரமாகவிருந்து மிருதங்கத்தை வாசித்தது ரசிகர்களை வெகுவாகக் கவர்ந்துவிட்டது.

வராளி இராகத்தில் ஆதி தாளத்தில் பாடப்பட்ட “காவாவா” என்ற உருப்படிக்கு வழங்கிய கற்பனை ஸ்வரங்களுக்கு மிருதங்கம் வாசித்தது ரஞ்ஜனி ராகத்தில் ஆதிதாளத்தில் அமைந்துள்ள “ரஞ்ஜனி” என்றாரம்பிக்கும் உருப்படி சமத்திலிருந்து மூன்று மாத்திரைதள்ளி எடுப்பிடமாகவுள்ள சரணப்பகுதியாகிய “பஞ்சதள லோச்சனிக்கு தனி ஆவர்த்தனம் போது ஆரம்பமுதல் இறுதிவரை எடுபபுக்காட்டி வாசித்ததும் ஜோராகவிருந்தது. தோடி இராகத்தில் ஆதிதாளத்தில் “ஆனந்த நடனமாடினார் தத் திமி தத்திமி யென கனகசபையில்” என்ற பல்லவியின்போது பஞ்ச நடையும் பிரதிபலிக்க பிரகலாதனின் கரங்களும் ஆனந்தமாடின.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இசைப்பாலமமைத்துக் கொண்டிருக்கும் பிரபல சங்கீத வித்துவான் மகாராஜபுரம் வி. சந்தானம் தலைமையில் இலங்கையில் சிறந்த கலைஞர்களுள் ஒருவராகிய திரு. பரம்தில்லைராஜா கச்சேரி செய்ய திரு.ஜீ. சண்முகானந்தம் வயலின் வாசிக்க செல்வன் பிரகலாதன் அவற்றிற்கிணையாக மிருதங்கம்வாசித்தானென்றால் யார்தான் பாராட்டார். இவையெல்லாம் அவன் குருகுலவாசமாகப் பயின்ற மிருதங்க சங்கீதபூஷணம் திரு. ஏ. எஸ். இராமநாதனின் திறமையாற் பிரதிபலித்தன வென்றே சொல்லவேண்டும். இச் சிறுவனை இளம்பிராயத்திலேயே சங்கீதத்துறையில் ஆர்வம்கொள்ளச் செய்த பிதா திரு. இரத்தினதுரையை இசையுலகம் எவ்வளவு பாராட்டினும் தகும்.

—ஈஸ்வரன்

---

## ஆர். ஆர். பிக்ஸர்ஸின் புதிய சமூகப் படம்

‘குலேபகாவலி’ ‘மணப்பந்தல்’ முதலிய படங்களைத் தயாரித்து வெற்றிகண்ட ஆர். ஆர். பட நிலையத்தாரின் புதிய சமூகச்சித்திரம் வாகினியில் வேகமாக வளர்ந்து வருகிறது.

இப்படத்தின் கதாநாயகன், கதாநாயகி யார் யார் என்பது இன்னும் தெரியவில்லையாயினும், எம். ஜி. ராமச்சந்திரனே கதாநாயகனாக நடிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. எம். ஜி. ஆர். தவிர, எம். ஆர். ராதா, டி. ஆர். ராஜகுமாரி ஆகியோர் இப்படத்தில் நடிக்கின்றனர். இவர்கள் நடித்த சில காட்சிகள் அண்மையில் படமாக்கப்பட்டன.

விசுவநாதன் — ராமமூர்த்தி இசையமைக்கும் இப்படத்தின் ஒளிப்பதிவாளர், ரகிமான். கவிஞர் கண்ணதாசன் பாடல்களை எழுதுகிறார். ராமண்ணா டைரக்ட செய்கிறார். திரைக் கதை, வசனம்—துறையூர் மூர்த்தி.


சினிமாஸ் திரைகளில் வெகுவிரைவில் எதிர்பாருங்கள்!
மனோஹர், தேவிகா நடித்த
பாஞ்சாலி

கிங்ஸ்லி (கொழும்பு) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)



சிவாஜி கணேசன்
ஜெமினி கணேசன்
எம். ஆர். ராதா
சாவித்திரி
நடித்த
பாவ மன்னிப்பு

மனோஹரா (யாழ்ப்பாணம்)
தினசரி மாலை 6-30 க்கும் இரவு 9-30 க்கும்
சனி, ஞாயிறு மெட்னி மாலை 2-30-க்கு
கிறிஸ்டியானு-மாட்டெல் கர்லோஸ்பயனு நடித்த
ஆதாமும் ஏவாளும்
(ஆங்கிலம்)

தினசரி மாலை 4-15 மணிக்கும்
சனி, ஞாயிறு காலை 10-30 மணிக்கும்
றுத்தின் சீவிய சரித்திரம்
(ஆங்கிலம்)


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி, 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1961-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 16-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.